
# தமிழினி

மார்கழி - தை 2019
இலங்கை விலை ரூபா 100/
லண்டன் 75 Pence

## தகவல் களஞ்சியம்

# PERSON of the YEAR


படவிளக்கம்
பக்கம் 2

தமிழினி குலேந்திரன் 2019 குடிவரவு
ஆலோசகர் விருது பெற்றுள்ளார்

## பொறிஸ் ஜோன்ஸன் 80% அதிகப்படி வாக்குகளால் வெற்றி பெற்றார்



## 13 லட்சம் அதிகமான வாக்குகளால் இலங்கை அதிபராகத் தெரிவாகியுள்ள கோதபாய ராஜபக்ச



## இலங்கை பிரதமரானார் மஹிந்த ராஜபக்ச





பத்து வயது செல்வன் - சந்தோஷ் திருக்குமரன் இரண்டு நிமிடத்துக்கு குறைவான நேரத்தில் 111 கணித வினாக்களுக்கு விடையளித்து சிறந்த மாணவனாக தெரிவானார்



இங்கிலாந்து கிரிக்கெட் தலைவர் பென் ஸ்டோக்ஸ் இவ்வருடம் விளையாட்டு மனிதராக தெரிவானார்

வாசகர்களுக்கு எங்கள் நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்

# மரண அறிவித்தல்



## திருமதி பாக்கியம் துரைராஜா

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்படமாகவும் கொண்ட **திருமதி பாக்கியம் துரைராஜா 21.12.2019 சனிக்கிழமை அதிகாலை காலமானார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா – ராசம்மா தம்பதிகளின் மகளும், காலஞ் சென்றவர்களான வல்லிபுரம் – பொன்னம்மா தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற துரைராஜாவின் (துரை) அன்பு மனைவியும் V.T. ராஜேந்திரா (ஓய்வு நிலை BOC முகாமையாளர், ஆய்வாளர் Teacher, Colombo - Unique College). நீலா (கிளி.) உமாதேவி (ரவி). இலங்காதேவி (பபா – ஜேர்மனி), காஞ்சனாதேவி (பேபி – ஹொலண்ட்), சுதேந்திரன் (UK), நிரஞ்சனாதேவி (ராசாத்தி – கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலாவதி (கமலா), சற்குணம் நித்தியானந்தம் (செல்வம்), சிவராஜா, பழனித்துரை (பழநி – ரவி), ஜெயராணி (ராணி), புவனாபாஸ்கரன் (பாஸ்கரன்) ஆகியோரின் மாமியாரும், டிலுக்ஷன் (டிலு – Australia), கலெக்ஷனி (சுதனி – UK), கீர்த்தனா, நளினி (சிங்கப்பூர்), லாவர்ணன் (லாவா), கவிவர்ணன் (கவி), அனோகன் (ஜேர்மனி), கவிதாரணி (ஹொலண்ட்), அபிலாஷ் (UK), காவியா, ரம்யா, சந்தியா (கனடா), ஹரணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர் களான பவளம், ராஜதுரை (ராசு), தங்கம்மா (செவ்வந்தி), நல்லம்மா மற்றும் கமலாம்மாள் (கமலம்), யோகாம்பாள் (யோகம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை சிவபாக்கியம், தி. கந்தையா, ப. கந்தையா, செல்வநாயகம், பெருமாள்பிள்ளை, S.V. கந்தையா, சுப்பிரமணியம் மாணிக்கம், செல்லத்துரை (இராமலிங்கம்) ஆகியோரின் மைத்துணியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அம்மன் வீதி திருநெல்வேலி மேற்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நாளை (24.12.2019) செவ்வாக்கிழமை நடைபெற்று பூதவுடல் பிற்பகல் (1 மணி) ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

### தகவல்:

| மகன்மார் | மருமக்கள் |
|---|---|
| V.T. ராஜேந்திரா – 077 228 6923 | சற்குணம் – 077 309 6882 |
| V.T. சுதேந்திரன் – 071 475 7624 | செல்வம் – 077 401 5621 |

**"இந்திர பவனம்" அம்மன் வீதி, திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம்.**

**021 222 3475**



# ஆசிரியர் பக்கம்

2019 விடை பெற்று 2020 வந்துவிட்டது. பழையன கழிதலும் புதியன புகுதலும் வாழவல்ல. இந்தியாவில் நடைபெற்று வரும் போராட்டங்கள் – உயிரிழப்புகள் பொருள் சேதம் என்பன கவலை தரும் விடயங்களாகும்.

சட்டங்கள் இயற்றுவதும் அதனை அங்கீகாரம் செல்வதும் பாராளுமன்றம் ஆகும். குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்றபின் எதிர்க்கட்சிகள் அரசியல் ஆதாயம் தேடி அழிவுகளில் ஈடுபட்டிருப்பது அநாகரீகமான செயற்பாடே!

அண்மையில் பிரித்தானியாவில் நடைபெற்ற தேர்தல் எவ்வாறு நாகரீகமாக வன்முறைகள் இன்றி நடைபெற்றது என்பதை இந்திய எதிர்க்கட்சிகள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

காந்தியின் படத்தை பிரசுரித்தால் போதாது. அவர் காட்டிய வழி முறைகளை ஒருவராது பின்பற்ற வேண்டும்.

2020 இதற்கு வழி சமைக்கட்டும்.




# கோதாவின் ஆட்சியில் மக்களின் பாதுகாப்பு உறுதிசெய்யப்படும்

## பசில் உறுதி கூறுகிறார்

# ஸ்ரீலங்காவின் எட்டாவது ஜனாதிபதியாக கோத்தபாய ராஜபக்ஷ



**ஸ்ரீலங்காவின் எட்டாவது ஜனாதிபதி யாக கோத்தபாய ராஜபக்ஷ 13,600,18 மேலதிக வாக்குகளால் தெரிவு செய்யப்பட் டுள்ளார். கோத்தபாய 69,24,255 வாக்கு களைப் பெற்று 52.25 வீத வாக்குகளை தனதாக்கினார்.**

**சஜித் பிரேமதாச 55,64,298 வாக்கு களுடன் 41.99 வாக்குகளை பெற்றார்.**

சனிக்கிழமை நடைபெற்ற தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்றிருந்த 1,59,92,096 பேரில், 1,33,87,951 (83,727) பேர் வாக்களித்திருந்ததுடன், அவற்றில் 1,35,452 வாக்குகள் நிராகரிக்கப்பட்டிருந்தன. இதன்படி வேட்பாளர் ஒருவர் வெற்றி பெறுவதற்காக செல்லுபடியான 1,32,52,499 வாக்குகளில் 66,26,250 வாக்குகளை (50 வீத வாக்கு) பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற நிலையில் கோதாபாய ராஜபக்ஷ அதனை விடவும் 2,98, 005 வாக்குகளை மேலதிகமாகப் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

இம்முறை தேர்தலில் 35 வேட்பாளர்கள் போட்டியிட்ட போதும் அவர்களில் கோதாபய ராஜபக்ஷக்கும், சஜித் பிரமேதாசவுக்கும் இடையிலேயே கடும் போட்டி நிலவியது. இதன்படி 22 தேர்தல் மாவட் டங்களில் 16 மாவட்டங்களை வெற்றி கொண்டுள்ள கோதாபய ராஜபக்ஷ, 160 தொகுதிகளை கைப்பற்றி நாடு பூராகவும் 69,24,255 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

அதேவேளை 6 மாவட்டங்களில் மாத்திரம் வெற்றி பெற்று, தொகுதி களை கைப்பற்றிய சஜித் பிரேமதாச நாடு பூராகவும் 55,642,39 வாக்குகளையே பெற்றுக் கொண்டுள்ளார்.

எவ்வாறாயினும், வடக்கில் 5 மாவட்டங்களிலும் மற்றும் மலை யகத்தின் நுவரெலியா மாவட்டத்திலும் கோதாபய ராஜபக்ஷவைவிட பெரும்ளவு வாக்கு வித்தியாசத்தில் சஜித் பிரேமதாச பாரிய பெற்றியைப் பெற்றுக் கொண்டுள்ளார். அதாவது, சஜித் பிரேமதாச வடக்கில் யாழ்ப்

பாணம் மாவட்டத்தில் 3,12,722 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ள அதேவேளை, கோதாபய ராஜபக்ஷ 23,261 வாக்குகளை மாத்திரமே பெற்றுக் கொண்டுள்ளார். அத்துடன், வன்னி மாவட்டத்தில் சஜித் பிரேமதாச, 1,74,734 வாக்குகளை பெற்றுக் கொண்டுள்ள நிலையில் 26,105 வாக்குகளையே கோதாபய ராஜபக்ஷ பெற்றுக் கொண்டுள்ளார். அதேவேளை கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சஜித் பிரேமதாச 2,38,649 வாக்குகளை பெற்றுக் கொண்டுள்ள நிலையில், கோதாபய ராஜபக்ஷ 38,460 வாக்குகளையே பெற்றுக் கொண்டுள்ளார். அத்துடன், திருகோணமலை மாவட்டத்தில் சஜித் பிரேமதாச 1,66,841 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளதுடன் கோதாபய ராஜபக்ஷ 54,135 வாக்குகளையே பெற்றுக் கொண்டுள்ளார். அதேபோன்று திகாமடுல்ல மாவட்டத்தில் சஜித் பிரேமதாச 2,59,673 வாக்குகளை பெற்றுக் கொண்டுள்ளதுடன் கோதாபய ராஜபக்ஷ 1,35,058 வாக்குகளை பெற்றுக் கொண்டுள்ளார்.

இதேவேளை நுவரெலியா மாவட்டத்தில் சஜித் பிரேமதாச 2,77,913 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ள நிலையில் கோதாபய ராஜபக்ஷ 1,75, 823 வாக்குகளையே பெற்றுக் கொண்டுள்ளார்.

எவ்வாறாயினும் மற்றைய அனைத்து மாவட்டங்களிலும் குறிப் பிடத்தக்க வாக்கு வித்தியாசத்தில் சஜித் பிரேமதாசவை தோற்கடித்து கோதாபய ராஜபக்ஷ வெற்றி பெற்றுள்ளார். இதன்படி மேல் மாகாணத்தில் கொழும்பு மவாட்டத்தில் கோதாபய ராஜபக்ஷ 7,27,713 வாக்குகளையும், சஜித் பிரேமதாச 5,59,921 வாக்குகளையும் பெற்றுக் கொண்டுள்ளனர். களுத்துறை மாவட்டத்தில் கோதாபய ராஜபக்ஷ 4,82,920 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளதுடன் சஜித் பிரேமதாச 2,84,213 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளார். அத்துடன், கம்பஹா மாவட்டத்தில் கோதாபய ராஜபக்ஷ 8,55,870 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளதுடன் சஜித் பிரேமதாச 4,94,671 வாக்குகளையே பெற்றுக் கொண்டுள்ளார்.

மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் கோதாபய ராஜபக்ஷ 4, 71,502 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளதுடன் சஜித் பிரேமதாசா 4,71, 355 வாக்குகளையே பெற்றுக் கொண்டுள்ளார். மாத்தளை மாவட்டத்தில் கோதாபய ராஜபக்ஷ 1,87,821 வாக்குகளை பெற்றுக் கொண்டு நிலையில், சஜித் பிரேமதாசா 1,34,291 வாக்குகளையே பெற்றுக் கொண்டுள்ளார்.

இதேவேளை தென்மாகாணத்தில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கோதாபாய ராஜபக்ஷ 2,78,804 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ள நிலையில், சஜித் பிரேமதாச 1,08,906 வாக்குகளையே பெற்றுக் கொண்டுள்

ளார். மாத்தறை மாவட்டத்தில் கோதாபய ராஜபக்ஷ 3,74,481 வாக்குகளை பெற்றுக் கொண்டுள்ளதுடன் சஜித் பிரேமதாச 1,49,026 வாக்குகளையே பெற்றுக் கொண்டுள்ளார். காலி மாவட்டத்தில் கோதாபாய ராஜபக்ஷ 4,66, 148 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளதுடன் சஜித் பிரேமதாச 2,17,401 வாக்குகளையே பெற்றுக் கொண்டுள்ளார்.

வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் கோதாபய ராஜபக்ஷ 6,52,278 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ள அதேவேளை சஜித் பிரேமதாச 4,16,961 வாக்குகளையே பெற்றுக் கொண்டுள்ளார். புத்தளம் மாவட்டத்தில் கோதாபய ராஜபக்ஷ 2,30,760 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ள நிலையில் சஜித் பிரேமதாச 1,99,356 வாக்குகளையே பெற்றுக் கொண்டுள்ளார்.

வடமத்திய மாகாணத்தின் பொலனறுவை மாவட்டத்தில் கோதா பாய ராஜபக்ஷ 1,47,340 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளதுடன், சஜித் பிரேமதாச 1,12,473 வாக்குகளையே பெற்றுக் கொண்டுள்ளார். அனுராத புரம் மாவட்டத்தில் கோதாபய ராஜபக்ஷ 3,42,223 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளதுடன், சஜித் பிரேமதாச 2,02,348 வாக்குகளையே பெற்றுக் கொண்டுள்ளார்.

ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் கோதாபய ராஜபக்ஷ 2, 76,21 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளதுடன் சஜித் பிரேமதாச 2,51,706 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளார். அத்துடன், மொனராகலை மாவட்டத்தில் கோதாபய ராஜபக்ஷ 2,08,814 வாக்குகளை பெற்றுக் கொண்டுள்ளதுடன் சஜித் பிரேமதாச 92,539 வாக்குகளையும் பெற்றுக் கொண்டுள்ளார்.

சப்ரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தில் கோதாபய ராஜபக்ஷ 3,20,484 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளதுடன் சஜித் பிரேமதாச 2,28,032 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளார். அத்துடன், இரத்தினபுரி மாவட்டத்தில் கோதாபய ராஜபக்ஷ 4,48,044 வாக்குகளை பெற்றுக் கொண்டுள்ளதுடன் சஜித் பிரேமதாச 2,64,503 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

இதேவேளை, தேர்தலில் தேசியமக்கள் சக்தி வேட்பாளராக போட்டி யிட்ட அனுரகுமார திஸாநாயக்க 22 தேர்தல் மாவட்டங்களிலும் 3.16 என்ற வாக்கு வீதத்துடன் 4,18,553 வாக்குகளையும், தேசிய மக்கள் கட்சி வேட்பாளரான முன்னாள் இராணுவத் தளபதி மகேஸ் சேனாநாயக்க 0.37 என்ற வாக்கு வீதத்துடன் 49,655 வாக்குகளையும் பெற்று 3ஆம், 4ஆம் இடங்களை பெற்றுக் கொண்டுள்ளனர்.

## அயோத்தி வழக்கு தீர்ப்பு செய்தியை சேகரிப்பதற்காக, உச்சநீதிமன்ற வளாகத்தில் நேற்று குவிந்த ஊடகத்தினர்

# தீர்ப்பின் 7 சிறப்பு அம்சங்கள்

### நீண்ட நாட்கள் விசாரிக்கப்பட்ட 2வது வழக்கு

உச்சநீதிமன்றம் கடந்த 1950ம் ஆண்டு அமைக்கப்பட்டது. கடந்த 69 ஆண்டுகளில் இது பல்வேறு முக்கிய வழக்குகளை விசாரித்து தீர்ப்புக்களை வழங்கியுள்ளது. உச்சநீதிமன்ற வரலாற்றில் அதிக நாட்கள் விசாரணை நடைபெற்ற 2வது பெரிய வழக்கு. அயோத்தி நிலம் தொடர்பானதுதான். இது கடந்த ஆகஸ்ட் 6ம் தேதி தொடங்கி, அக்டோபர் 16ம் தேதி வரை 40 நாட்கள் தொடர்ச்சியாக நடந்தது. இதற்கு முன், 1973ம் ஆண்டில் கேசவானந்தா பாரதி வழக்குதான் 68 நாட்கள் தொடர்ச்சியாக விசாரிக்கப்பட்டது. அதேபோல், ஆதார் திட்டம் தொடர்பான வழக்கு, 38 நாட்கள் தொடர்ச்சியாக விசாரிக்கப்பட்டது. அதிக நாட்கள் விசாரிக்கப்பட்ட 3வது வழக்கு இதுதான்.

### தீர்ப்புக்கு வழிவகுத்த தொல்லியல் அறிக்கை

அயோத்தி வழக்கு விசாரணையின்போது உச்சநீதிமன்றத்தில் தொல்லியல் துறை தாக்கல் செய்த அறிக்கைதான் பெரும் திருப்பு முனையை ஏற்படுத்தியது. அதில், கடந்த 2003ம் ஆண்டு அலகாபாத் உயர்நீதிமன்ற உத்தரவுப்படி தொல்லியல் துறை தரப்பில் பிரச்சனைக் குரிய இடத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. அந்த இடத்தில் இந்து முறைப்படி ராமர் கோயில் இருந்ததற்கான அனைத்து ஆதாரங்களும் இருக்கின்றன என கூறப்பட்டு இருந்தது. இதன் அறிக்கையே, அயோத்தி வழக்கு தீர்ப்பில் முக்கிய அம்சமாக எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கிறது. தொல்லியல் துறையின் அறிக்கையை தங்கள் தீர்ப்பில் நீதிபதிகள் முக்கியமான ஆதாரமாக குறிப்பிட்டுள்ளனர்.

### கோகாய்க்கு இசட் பிளஸ் நீதிபதிகளுக்கு பாதுகாப்பு

அயோத்தி நில வழக்கில் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியுள்ள உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய்க்கு இசட் பிளஸ் பாதுகாப்பு அளிக்கப்பட உள்ளது. இதுநாட்டின் மிக உயர்ந்த பாதுகாப்புகளில் ஒன்றாகும். அதேபோல் இந்த வழக்கை விசாரித்த

அரசியல் சாசன அமர்வில் இடம்பெற்ற மூத்த நீதிபதிகள் எஸ்.ஏ. பாப்டே, டி.ஒய். சந்திராசூட், அசோக் பூஷன் மற்றும் எஸ்.ஏ. நசீர் ஆகியோர்களுக்கும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு உள்ளது.

## சமரச குழு தோல்வி

அயோத்தி நிலபிரச்சனையை தீர்ப்பதற்காக மூன்று பேர் கொண்ட சமரச குழுவை உச்சநீதிமன்றம் நியமித்தது. அதில் ஓய்வபெற்ற நீதிபதி எப்.எம். கலிபுல்லா தலைமையில், வாழும் கலை அமைப்பின் தலைவர் ஸ்ரீ.ஸ்ரீ. ரவிசங்கர், வழக்கறிஞர் ஸ்ரீராம் பஞ்சு ஆகியோர் இடம்பெற்றனர். ஆனால் 2 மாதம் விசாரித்த இந்த குழு, கடந்த ஜுலை 3ம் தேதி தாக்கல் செய்த அறிக்கையில் அயோத்தி நில பிரச்சனை விவகாரத்தில் 70 சதவீதம் மட்டுமே பேச்சுவார்த்தை நடத்த முடிந்தது. வழக்கில் தொடர்பு உள்ளவர்கள் இடையே எங்களால் முழுமையாக சமரசம் செய்ய முடியவில்லை. அதனால் மேற்கொண்டு எந்த முயற்சியையும் தொடர இயலாது. இதில் மூன்றாவது நபரின் தலையீடு உள்ளதாக நாங்கள் கருதுகிறோம் என குறிப்பிடப்பட்டது. இதையடுத்து, சமரச குழுவின் சமரச முயற்சி தோல்வி அடைந்ததாக கடந்த ஆகஸ்ட் 2ம் தேதி அதிகாரபூர்வமாக அறிவித்தது.

## வரைபடம் கிழிப்பு

அயோத்தி நிலம் தொடர்பான வழக்கு விசாரணை உச்சநீதி மன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, மூத்த வழக்கறிஞர் விகாஸ் சிங், 'அயோத்தி மீள்வருகை' என்ற தலைப்பிட்ட ஆங்கில நூலை ஆதாரம் காட்டி தனது வாதத்தை தொடங்கினார். இதற்கு சன்னி வக்பு வாரியம் தரப்பில் ஆஜரான மூத்த வக்கீல் ராஜீவ் தவான் கடும் ஆட்சேபனை தெரிவித்தார். அப்போது, குறுக்கிட்ட வழக்கறிஞர் விகாஸ் சிங், நான் அந்த நூலை ஆதாரத்துக்கு முன்வைக்கப் போவது இல்லை. இதில் இணைக்கப்பட்டுள்ள ராமர் பிறந்த இடம் தொடர்பான வரைபடத்தையும், சில பக்கங்களையும் மட்டுமே நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உள்ளேன் என்று கூறினார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்த ராஜீவ் தவான், அந்த வரைபடம் கொண்ட பக்கங்களை துண்டு, துண்டாக கிழித்து நீதிமன்ற விசாரணை அறையின் உள்ளேயே வீசினார். இதற்கு தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் கடும் எச்சரிக்கை கொடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பு, 1045 பக்கங்கள் கொண்டது. அதில், நீதிபதிகள் கூறியுள்ள 7 முக்கிய அம்சங்கள் வருமாறு:

1. ஷியா அமைப்பின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. ஷியா வக்பு வாரியத்தைப் பொறுத்தவரையில் சன்னி பிரிவை சேர்ந்த மன்னர் பாபரால் இந்த மசூதி கட்டப்படவில்லை. அவரது தளபதிகளில் ஒருவரான ஷியா பிரிவை சேர்ந்தவராலேயே இந்த மசூதி கட்டப்பட்டது என்கிற வாதத்தை முன்வைத்திருந்தது. இதை நீதிபதிகள் ஏற்காததால் அவர்களின் வாதம் நிரூபிக்கப்படவில்லை. இதனால், நிலத்திற்கு உரிமை கோரிய ஷியா அமைப்பின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.
2. அயோத்தி நிலத்திற்கு உரிமை கோரும் நிர்மோகி அகார மனுவில் உண்மை மற்றும் ஆதாரம் இருப்பதாகவும் தெரியவில்லை. அவர்களும் இதை நிரூபிக்கவில்லை. மேலும் அங்கு அவர்களுக்கு வழிபாட்டு உரிமை இருந்ததாக வரலாற்று ரீதியான எந்த ஆதாரமும் இல்லை. அதனால் நிலத்திற்கு உரிமை கோரும் உரிமை நிர்மோகி அகார அமைப்பிற்கும் இல்லை என்ற இரண்டு முக்கிய மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டது.
3. இஸ்லாமியர்கள் சர்ச்சைக்குரிய அந்த நிலத்தின் உட்பகுதியில் தொழுகை செய்து வந்தது நிரூபணம் ஆகியுள்ளது. இதில், ராமர் கோவில் தடங்கலாக இருந்தாலும் இஸ்லாமியர்கள் உள்பக்கத்தில் தொழுகை நடத்தி வந்துள்ளனர். இது பலகாலமாக நீடித்து வந்து இருக்கிறது. இருப்பினும், அவர்கள் மசூதியை விட்டு செல்ல வில்லை என்றும் நிரூபணம் ஆகியுள்ளது.
4. இன்னொரு பக்கம் இந்துக்கள், அயோத்தியில் சர்ச்சைக்குரிய நிலத்தின் உட்பகுதியில் தான் ராமர் பிறந்ததாக நம்புகிறார்கள். அந்த இடத்தின் வெளிப்பகுதியில் இந்துக்கள் வழிபாடு நடத்தி வந்துள்ளனர். அங்கு இரண்டு வழிபாடும் நடந்துள்ளது. தனியாக இஸ்லாமிய வழிபாடு நடந்தது என்றும் கூற முடியாது என்று நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.
5. 1992ல் உயர்நீதிமன்ற தீர்ப்பை மீறி பாபர் மசூதி இடிக்கப்பட்டு இருக்கிறது. இது சட்ட விதிப்படி தவறு. விதியை மீறி இந்த செயலை செய்து இருக்கிறார்கள். இதை நீதிமன்றம் கண்டித்துள்ளது.
6. 1949ம் ஆண்டு விதியை மீறி மசூதிக்குள் சிலைகள் வைக்கப்பட்ட போது வெளியே கலவரம் ஏற்பட்டது. இது சட்ட விதிகளுக்கு முரணானது என நீதிமன்றம் கண்டித்தது.

7. அலகாபாத் நீதிமன்றம் அயோத்தி நிலத்தை மூன்றாக பிரித்தது தவறு. ஷியா அமைப்பிற்கு நிலம் வழங்கியதை ஏற்க முடியாது. நிலத்தை சட்ட ரீதியாக மட்டுமே பிரித்திருக்க வேண்டும். அதை செய்யவில்லை என்று நீதிமன்றம் கண்டித்தது. இதுவும் தற்போது வழங்கப்பட்டுள்ள தீர்ப்புக்கு முக்கிய காரணம்.

## தீர்ப்பளித்த நீதிபதிகள்

1. தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய இவர் அச்சமின்றி முடிவெடுக்கும் தைரியமான நீதிபதி. அயோத்தி வழக்கை இவரது தலைமையிலான அமர்வு 40 நாள் தொடர்ந்து விசாரித்து தற்போது தீர்ப்பு வழங்கியுள்ளது. நாட்டின் 46வது தலைமை நீதிபதியாக கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் பொறுப்பேற்ற இவர், வடகிழக்கு மாநிலங்களில் இருந்து உச்சநீதிமன்றத்துக்கு வந்த முதல் நீதிபதி. இவரது பதவிக்காலம் வரும் 17ம் தேதி முடிகிறது. இவர் தலைமை நீதிபதியாக பதவி ஏற்றது முதல் பல ஏற்ற, இறக்கங்களை சந்தித்துள்ளார். உச்சநீதிமன்றத்தின் பெண் ஊழியர் ஒருவர் இவருக்கு எதிராக பாலியல் குற்றச்சாட்டு சுமத்தினார். நீதிபதி பாட்டே தலைமையிலான 3 நீதிபதிகள் அடங்கிய விசாரணைக் குழுவில் இவர் குற்றமற்றவராக அறிவிக்கப்பட்டார். முன்னாள் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ராவுக்கு எதிராக 4 நீதிபதிகள் போர்க்கொடி தூக்கினர். அவர்களில் இவரும் ஒருவர். உச்ச நீதிமன்ற நிர்வாகத்திலும் இவர் சிறப்பாக செயல்பட்டார். தவறு செய்த நீதிபதிகளை பணிமாற்றம் செய்ய பரிந்துரைத்தார். ஒரு வழக்கில் உயர்நீதிமன்ற பெண் நீதிபதி ஒருவரை ராஜினாமா செய்ய வைத்தார்.

2. நீதிபதி பாப்டே: உச்சநீதிமன்றத்தின் 47வது தலைமை நீதிபதியாக எஸ்.ஏ. பாப்டே (63) வரும் 18ம் தேதி பொறுப்பேற்க உள்ளார். இவர் சமீபத்தில் அளித்த பேட்டியில், இருக்கையை விட்டு எழுந்தவுடன், நீதிமன்றத்தில் நடக்கும் சம்பவங்களை மறந்து விடுவேன் என கூறினார். தனிநபர் ரகசியம் ஒருவரின் அடிப்படை உரிமை என உச்சநீதிமன்றத்தில் 9 நீதிபதிகள் அடங்கிய அமர்வு கடந்த 2017ம் ஆண்டு தீர்ப்பளித்தது. அதில் இவரும் ஒருவர். ஆதார் கார்டு இல்லை என்பதற்காக ஒருவருக்கு அரசின் சேவைகள் மறுக்கப்படக் கூடாது என உச்சநீதிமன்றத்தில் 3 நீதிபதிகள் அடங்கிய அமர்வு கடந்த 2015ம் ஆண்டு தீர்ப்பளித்தது. அந்த அமர்வில் பாப்டேவும் இடம் பெற்றிருந்தார். மகாராஷ்டிராவைச் சேர்ந்த இவர், கடந்த 2013ம் ஆண்டு உச்சநீதிமன்றத்துக்கு தேர்வு செய்யப்பட்டார்.

3. நீதிபதி அப்துல் நசீர்: அயோத்தி வழக்கு தீர்ப்பு வழங்கிய உச்சநீதிமன்றத்தில் 5 நீதிபதிகள் அடங்கிய அமர்வில் நீதிபதி அப்துல் நசீரும் இடம் பெற்றிருந்தார். முஸ்லிம் தரப்பு வாதங்களை இவர் ஏற்கவில்லை. மற்ற நீதிபதிகளுடன் இணைந்து ஒருமனதான தீர்ப்பை வழங்கினார். முத்தலாக் விவகாரத்தை விசாரித்த 5 நீதிபதிகள் அடங்கிய உச்சநீதிமன்ற அமர்விலும் இவர் இடம் பெற்றிருந்தார். ஆனால், முத்தலாக் என்பது சட்ட விரோதம், அரசியல் சாசனத்துக்கு எதிரானது என 3:2 என்ற விகிதத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பில் இவர் மாற்று தீர்ப்பை அளித்தார். அயோத்தி வழக்கை அமைக்கப்பட்ட அரசியல் சாசன அமர்வில் முதலில் இவர் இடம் பெறவில்லை. நீதிபதிகள் ரமணா, யு.யு. லலித் ஆகியோர் இந்த அமர்வில் இருந்து விலகியதால், நீதிபதி அப்துல் நசீர் சேர்க்கப்பட்டார். இவர் கர்நாடக உயர்நீதிமன்றத்தில் இருந்து கடந்த 2017ம் ஆண்டு உச்சநீதிமன்றத்துக்கு தேர்வு செய்யப்பட்டவர்.

4. நீதிபதி சந்திராசூட்: இவர் உச்சநீதிமன்றத்துக்கு தேர்வு செய்யப்பட்டு மூன்றரை ஆண்டுகள் ஆகிறது. அயோத்தி வழக்கு போல் இவர் பல முக்கிய தீர்ப்புகளை வழங்கிய அமர்வில் இடம் பெற்றுள்ளார். கள்ளக்காதல், தனிநபர் ரகசியம் உரிமை, ஐபிசி 377 பிரிவை குற்றமற்றதாக்கியது. சபரிமலை விவகாரம், ஆதார் வழக்கு உட்பட பல வழக்குகளில் இவர் சிறப்பான தீர்ப்பு வழங்கியுள்ளார். சீனியாரிட்டி அடிப்படையில் இவர் வரும் 2022ம் ஆண்டு முதல் 2024ம் ஆண்டு வரை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பொறுப்பு வகிப்பார். நீதிபதிகள் ரஞ்சன் கோகாய், பாப்டேவுக்கு அடுத்தபடியாக உள்ள சீனியர் நீதிபதி இவர்தான்.

5. நீதிபதி அசோக் பூஷன்: அயோத்தி வழக்கை விசாரிக்க 5 நீதிபதிகள் அமர்வு அமைக்கப்பட்டபோது முதலில் இவர் இடம் பெறவில்லை. நீதிபதிகள் ரமணா, யு.யு. லலித் ஆகியோர் வெளியேறியதால் இந்த அமர்வுக்கு அசோக் பூஷனும், அப்துல் நசீரும் வந்தனர். ஆதார் எண்ணை, பான் எண்ணுடன் இணைப்பதற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கை இவரும், நீதிபதி ஏ.கே. சிக்ரியும் நிராகரித்தனர். மத்திய அரசுக்கும், டெல்லி அரசுக்கும் அதிகார மோதல் ஏற்பட்டபோது, அதை தீர்த்து வைக்கும் வழக்கிலும் இவர் அதிகாரத்தை மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் பகிர்ந்து தீர்ப்பளித்தார். தலைமை நீதிபதியின் நிர்வாக அதிகாரம் தொடர்பான வழக்கிலும், தலைமை நீதிபதியே நீதித்துறையின் தலைவர் என இவர் தீர்ப்பளித்தார். உ.பி.யைச் சேர்ந்த இவர் கடந்த 2016ம் ஆண்டு உச்சநீதிமன்றத்துக்கு தேர்வு செய்யப்பட்டார்.

## வழக்கு கடந்த பாதை

1528 அயோத்தியில் சர்ச்சைக்குரியதாக கருதப்பட்ட இடத்தில் முகலாய மன்னர் பாபரின் உத்தரவுப்படி, அவருடை தளபதி மிர்பக்கியல் பாபர் மசூதி கட்டப்பட்டது.

1885 மகந்த் ரமகுபிர் தாஸ் என்பவர் பைசாபாத் மாவட்ட நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில், சர்ச்சைக்குரிய இடத்துக்கு வெளியே ராமர் கோயில் விவாதனம் அமைக்க அனுமதி கோரினார். அது தள்ளுபடி செய்யப்பட்டது.

1949 பாபர் மசூதிக்குள் ராமர் சிலை வைக்கப்பட்டது. இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்த மாவட்ட நிர்வாகம் மசூதியை மூடி முத்திரையிட்டது.

1950 பாபர் மசூதியை வழக்கமான வழிபாடுகளுக்காக திறக்க வேண்டும் என பரிசாபாத் நீதிமன்றத்தில் கோபால் சிங் விஷாரத் என்பவர் மனு தாக்கல் செய்தார். பின்னர், இதே கோரிக்கையை வலியுறுத்தி பலரும் மனு தாக்கல் செய்தனர்.

1961 பாபர் மசூதி தங்களுக்கு சொந்தமானது என்ற இந்து அமைப்புகளின் வாதத்தை எதிர்த்து உத்தரப்பிரதேச சன்னி வக்பு வாரியம் வழக்கு தொடர்ந்தது.

1986 பாபர் மசூதியை திறக்கவும், இந்துக்கள் வழிபாடு நடத்தவும் அனுமதித்து பரிசாபாத் மாவட்ட நீதிபதி ஹரி சங்கர் பாண்டே உத்தரவிட்டார். இதே ஆண்டில் உடனடியாக பாபர் மசூதி செயல்பாட்டுக் குழு அமைக்கப்பட்டது.

1989 பாபர் மசூதி – ராம ஜென்ம பூமி தொடர்பான வழக்குகள் அனைத்தும் உத்தரப்பிரதேச உயர்நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டன. திரிலோக் நாத் பாண்டே என்பவர் தன்னை ராமரின் நெருங்கிய நண்பர் எனக் கூறி வழக்கில் தன்னை இணைத்து கொண்டார்.

1992 பாஜ தலைவர் அத்வானி தலைமையில் கரசேவை நடத்தப்பட்டு பாபர் மசூதி இடிக்கப்பட்டது. இது குறித்து விசாரிக்க லிபரான் ஆணையத்தை 1992ஆம் ஆண்டு டிசம்பர் 12ம் தேதி அப்போதைய பிரதமர் நரசிம்மராவ் அமைத்தார்.

1993 மசூதி இடிப்பு தொடர்பாக பாஜ மூத்த தலைவர் அத்வானி உள்ளிட்ட 19 பேர் மீது சிபிஐ வழக்குப் பதிவு செய்தது.

1994 அக் 24 இஸ்மாயில் பரூக் என்பவர் தொடர்ந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், மசூதியில் தொழுகை நடத்துவதால் மட்டுமே இஸ்லாம் முழுமை அடைந்து விடாது என தெரிவித்தது.

2000 மே, அத்வானி முரளி மனோகர் ஜோஷி மீதான குற்றம்பிரிவுகளை சிறப்பு நீதிமன்றம் நீக்கியது.

2003 அலகாபாத் உயர்நீதிமன்ற உத்தரவுப்படி தொல்லியல் துறை மேற்கொண்ட ஆய்வில், மசூதியின் கீழே ராமர் கோயில் இருந்ததற்கான ஆதாரம் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. இதை இஸ்லமிய அமைப்புகள் நிராகரித்தன.

2009 ஜுன் லிபரான் ஆணையம் தனது அறிக்கை தாக்கல் செய்தது. அதில் பாபர் மசூதி இடிப்பு தொடர்பாக 68 பேர் மீது குற்றம் சாட்டியது.

2010 செப். 30, அலகாபாத் உயர்நீதிமன்ற 3 நீதிபதிகள் அமர்வு, பாபர் மசூதி வழக்கில் தீர்ப்பு வழங்கியது. அதில் சர்ச்சைக்குரிய நிலத்தை 3 பகுதிகளாக பிரித்து, 2 பகுதியில் இந்து அமைப்புகளிடமும், ஒரு பங்கை முஸ்லிம் அமைப்புகளிடமும் வழங்க உத்தரவிட்டது.

2011 உயர்நீதிமன்ற தீர்ப்பை ஏற்காத வழக்கின் 3 தரப்பும், உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தன.

2011 மே, அலகாபாத் உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு உச்சநீதிமன்றம் தடைவிதித்தது.

2016 பிப்., பாஜ மூத்த தலைவர் சுப்பிரமணிய சுவாமி அயோத்தி தொடர்பான மேல்முறையீட்டு மனுவை அவசர வழக்காக விசாரிக்கக் கோரி மனு தாக்கல் செய்தார்.

2017 மார்ச் 21, சுப்பிரமணிய சுவாமியின் மனுவை விசாரித்த உச்சநீதிமன்ற 3 நீதிபதிகள் அமர்வு, நீதிமன்றத்திற்கு வெளியே சமரசம் காண அறிவுறுத்தியது. அவ்வாறு முன்வந்தால் மத்தியஸ்தம் செய்யத் தயார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

2019 ஜன 8, உச்சநீதின்றம் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் தலைமையில் 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு அமைக்கப்பட்டது. இந்த அமர்வு தினசரி அடிப்படையில் தொடர்ந்து 40 நாட்கள் விசாரித்து நேற்று தீர்ப்பு வழங்கியது.

# ராமர் பிறந்த இடம் அயோத்திதான் என உச்சநீதிமன்றம் முடிவு செய்தது எப்படி

# தீர்ப்புக்கு உதவிய ராமாயணம், இதிகாசம், பயணக்குறிப்புகள்

ராமர் பிறந்த இடம் அயோத்திதான் என்பதற்கான ஆதாரம் குறித்து உச்சநீதிமன்ற தீர்ப்பில் அரசியல் சாசன அமர்வு விரிவான விளக்கத்தை அளித்துள்ளது.

பல நூற்றாண்டுகளாக நீடித்து வந்த அயோத்தியின் சர்ச்சைக்குரிய நில விவகாரத்தில் உச்சநீதிமன்றம் நேற்று முன்தினம் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பளித்தது. சர்ச்சைக்குரிய 2.77 ஏக்கர் நிலம் இந்துக்களுக்கே சொந்தம் என்றும், ராமர் பிறந்த இடமான அங்கு ராமர் கோயிலை கட்டலாம் என்றும் அனுமதி அளித்துள்ளது. இதில், எதன் அடிப்படையில் அந்த இடம் ராமர் பிறந்த இடமாக நீதிமன்றம் ஒரு முடிவிற்கு வந்தது என்பதைப் பற்றி நீதிபதிகள் தீர்ப்பில் முழு விளக்கம் அளித்துள்ளனர்.

## *அது தொடர்பாக உச்சநீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விளக்கம்:*

இந்துமதத்தின் அடிப்படையே இதிகாசங்கள் தான். இந்து மதத்தின் அடிப்படைகள் அவற்றில் முழுமையாக வரையறுக்கப்பட்டு உள்ளன. அவற்றில் ராமர் பற்றி அறிந்து கொள்வதற்கான முக்கிய ஆதாரமாக இருப்பது வால்மீகி ராமாயணம். இது கிறிஸ்து பிறப்பதற்கு முந்தைய காலகட்டத்தில் எழுதப்பட்ட இதிகாசமாகும்.

வால்மீகி இராமாயணம், ஸ்கந்த புராணம் உள்ளிட்ட இதிகாசங்கள் மற்றும் இலக்கியங்களின் அடிப்படையில்தான் ராமர் பிறந்த இடம் அயோத்தி என இந்துக்கள் நம்புகின்றனர். அங்கு பாபர் மசூதி கட்டப்படுவதற்கு முன்பாக, அதாவது 1528ம் ஆண்டுக்கு முன்பாகவே இதிகாச, இலக்கியங்களில் உள்ள சுலோகங்களில் ராமர் பிறந்த இடம் அயோத்திதான் என்பது பற்றி விளக்கப்பட்டு இருக்கிறது.

வால்மீகி ராமாயணத்தின் 10வது சுலோகத்தில், 'ஒட்டுமொத்த உலகின் கடவுளான ராமரை தனது மகனான கவுசல்யா பிரசவித்தார்.

அவரது வரவால் அயோத்தியே ஆசீர்வதிக்கப்பட்டது,' என குறிப்பிடப்பட்டுள்ளது. 5வது ஈரடிச் செய்யுளில் 'ஜென்மபூமி' என்ற வார்த்தை இடம் பெற்றுள்ளது. இந்த வார்த்தை அயோத்தி எனும் நகரைக் குறிக்கிறதே தவிர, எந்த குறிப்பிட்ட இடத்தையும் கூறவில்லை. எனவே, அயோத்தியில் ராமரை கவுசல்யா பெற்றெடுத்தாள் என்றே வால்மீகி ராமாயணம் கூறுகிறதே தவிர, அது தசரதனின் அரண்மனையில்தான் என குறிப்பிட்டு எதையும் கூறவில்லை.

## மறந்துவிட்ட வரலாறு

**இந்தியாவுக்கு 17–19ம் நூற்றாண்டில் சுற்றுப்பயணம் மேற் கொண்ட வரலாற்று நிபுணர்களின் பயணக் குறிப்புகளையும், தங்களின் தீர்ப்புக்கு ஆதாரமாக எடுத்துக் கொண்டதாக உச்சநீதிமன்ற நீதிபதிகள் கூறியுள்ளனர். 'மறக்கப்பட்ட வரலாற்றின் தளர்வான துண்டுகளை பயணக் குறிப்புகளும், பழங்கால சுவடிகளும் கொண்டுள்ளன. அவற்றை எல்லாம் நீதிமன்றம் ஆழமாக ஆராய்ந்துள்ளது. சர்ச்சைக்குரிய இடம் பற்றி வெளிநாட்டு ஆய்வாளர்கள் தங்கள் பயணக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளனர். அதில் சர்ச்சைக்குரிய இடம் ராமர் பிறந்த இடமாக இந்துக்கள் பூஜித்ததாகவும் அங்கு பிரார்த்தனைகள் நடந்திருப்பதாகவும் கூறி உள்ளனர்' என தீர்ப்பில் விளக்கப்பட் டுள்ளது.**

இதேபோல, 8ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட ஸ்கந்த புராணம் செய்யுள்களிலும், ராமர் அயோத்தியில் பிறந்தார்என்று குறிப்பிடப் பட்டுள்ளது. துளசிதாசர் எழுதிய ராமாயணத்தில் அவாத்புரியில் விஷ்ணு மனித உருவமாக அவதரித்தார் என்று தசரதர், கவுசல்யாவின் வீட்டில் கடவுள் மனை அவதாரம் எடுத்தார் என்றும் கூறப்பட்டுள்ளது. எனவே, இது போன்ற இதிகாசங்களில் அடிப்படையிலேயே ராமர் பிறந்த இடமாக இந்துக்களிடம் நம்பிக்கை கொள்ளப்படுகிறது. இவை அனைத்தும் ஆதாரமற்றதாக இருக்க முடியாது.

இவ்வாறு நீதிபதிகள் தீர்ப்பில் கூறியுள்ளனர்.

வால்மீகி ராமாயணத்திலோ, துளசி தாசரின் ராமாயணத்திலே ராம ஜென்ம பூமி நிகழ்வு குறித்த எந்த தகவலும் இடம் பெறவில்லை என முஸ்லிம் தரப்பு வைத்த வாதத்திற்கு பதிலளிக்கும் விதமாக இந்து தரப்பினர் மேற்கண்ட ஆதாரங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# அயோத்தி வழக்கு; 18 சீராய்வு மனுக்கள் தள்ளுபடி

புதுடில்லி:அயோத்தி வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து, தாக்கல் செய்யப்பட்ட அனைத்து சீராய்வு மனுக்களையும் உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

உ.பி.,யில் அயோத்தியில் உள்ள சர்ச்சைக்குரிய நிலம் தொடர்பான வழக்கில், உச்ச நீதிமன்றத்தின், ஐந்து நீதிபதிகள் அடங்கிய, அரசியல் சாசன அமர்வு, நவ., 9ம் தேதி தீர்ப்பு அளித்தது. தீர்ப்பில்; 'சர்ச்சைக்குரிய நிலத்தில், ஹிந்துக் கடவுள் ராமருக்கு கோவில் கட்டலாம். மசூதி கட்டுவதற்காக, அயோத்தியின் முக்கிய இடத்தில் முஸ்லிம்களுக்கு, 5 ஏக்கர் நிலம் ஒதுக்க வேண்டும்' என, குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த தீர்ப்பை எதிர்த்து, வழக்கில் முன்பு சம்பந்தப்பட்டவர்களால் 9 சீராய்வு மனுக்களும், புதியவர்களால் 9 சீராய்வு மனுக்களுமாக மொத்தம் 18 சீராய்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்நிலையில், இந்த மனுக்கள் மீதான விசாரணையை, உச்ச நீதிமன்றத்தில், தலைமை நீதிபதி பாப்டே தலைமையில், நீதிபதிகள் சந்திரசூட், அசோக் பூஷண், நசீர், சஞ்சீவ் கன்னா ஆகியோர் அடங்கிய அமர்வு, (டிச.,12) விசாரித்தது. இதில், தீர்ப்பை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட 18 சீராய்வு மனுக்களையும் தள்ளுபடி செய்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

## குடும்ப சொத்தானது இலங்கை?

இலங்கையின் நிகழ்கால அமைச்சரவையில் ஜனாதிபதி கோத்தபாயராஜபக்சே மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்சே உட்பட 17 பேர்அங்கம் வகிக்கிறார்கள். இந்த 17 அமைச்சர்களும் 29 அமைச்சுக்களை பகிர்ந்து கொண்டு இருக்கிறார்கள்.

இந்த நிலையில் ஒவ்வொரு அமைச்சுக்குள்ளும் வரும் அரச நிறுவனங்கள் (மொத்தஅரச நிறுவனங்கள்445) தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டு இருக்கிறது.இவற்றுள் 156 அரச நிறுவனங்கள் ராஜபக்சே சகோதர்களுக்கு இடையே பகிரப்பட்டுஇருக்கிறது.அதாவது 35 % வீதமான அரச நிறுவனங்கள் வெறும் 3 பேர்களுக்கு (மகிந்த, கோத்தபாய மற்றும் சமல் ) இடையே பகிரப்பட்டு இருக்கிறது. மிகுதி14 அமைச்சர்களுக்கு இடையே வெறும் 289 நிறுவனங்கள் பகிரப்பட்டு இருக்கிறது.

# தமிழர்களின் வீர விளையாட்டுக்களை வளர்க்கும் கோயில் திருவிழாக்கள்

தமிழர்களின் வீர விளையாட்டுக்களை ஊக்குவித்து, வளர்க்கும் விதமாக கோயில் திருவிழாக்கள் செயல்படுகின்றன.

திருச்செங்கோடு சுற்று வட்டார பகுதிகளில் ஐப்பசி மாதத்தை யொட்டி பல்வேறு மாரியம்மன் கோயில்களில் திருவிழாக்கள் நடந்து வருகிறது. இந்த விழாவையொட்டி பூச்சாட்டுதல், அம்மன் திருவீதி உலா, அக்னி கரகம் எடுத்து வருதல் போன்ற நிகழ்ச்சிகள் நடந்தது. இந்த கோயில் திருவிழாக்களில் தமிழர்களின் பாரம்பரிய வீரவிளையாட்டுக் களான கத்தி சண்டை, சிலம்பம், சுருள் கத்தி வீச்சு, மான் கொம்பு சண்டை, தீப்பந்தம் சுழற்றுதல் உள்ளிட்ட பல்வேறு பாரம்பரிய வீரவிளையாட்டு களை, பல்வேறு குழுக்கள் மக்களிடம் செயல் விளக்கம் செய்து காட்டினர்.

இந்த வீர விளையாட்டுக்களை சிறுவர்களுக்கும், பள்ளி கல்லூரி மாணவ மாணவிகளுக்கும் கற்றுத்தரும் ஆதவன் குழுவினரின், வீர விளையாட்டுக்களை திருச்செங்கோடு எம்எல்ஏ பொன் சரஸ்வதி துவக்கி வைத்தார். இக்குழுவினர் மற்றும் பயிற்சி பெற்ற மாணவ, மாணவிகள் 4 ரத வீதிகளில், தங்களது வீர விளையாட்டுகளை விளையாடினர். பொது மக்கள் இவர்களது வீர விளையாட்டுக்களை ஆர்வத்துடன் கண்டுகளித் தனர்.




# சபரிமலை ஐயப்பன் கோயில் விவகாரம் குறித்து 7 நீதிபதிகள் அமர்வுக்கு மாற்றம்

## பெண்கள் செல்ல தடையில்லை உச்சநீதிமன்ற 5 பேர் பெஞ்ச் உத்தரவு

சபரிமலை ஐயப்பன் கோயிலில் அனைத்து வயது பெண்களையும் வழிபாட்டுக்கு அனுமதிக்கும் விவகாரத்தில் எந்தவித தடையும் விதிக்காத உச்சநீதிமன்றம், அது தொடர்பான வழக்கை 7 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வின் விரிவான விசாரணைக்கு மாற்றி உத்தரவிட்டுள்ளது.

கேளராவில் உள்ள சபரிமலை ஐயப்பன் கோயில் உலகப் பிரசித்து பெற்றது. இதில், 10 வயது முதல் 50 வயதிற்கு உட்பட்ட பெண்கள் சாமி தரிசனம் செய்ய அனுமதி கிடையாது. இது காலம், காலமாக கடைபிடிக்கப்படும் நடைமுறைக் குறிப்பிட்ட வயது பெண்கள் சுவாமி தரிசனம் செய்ய கடந்த 1991ல் கேரள உயர் நீதிமன்றமும் தடைவிதித்தது.

இந்நிலையில் மேற்கண்ட உத்தரவை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா தலைமையிலான அமர்வு, சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு வயது வித்தியாசம் இன்றி அனைத்து பெண்களும் சென்று சாமி தரிசனம் செய்யலாம் என்று கடந்தாண்டு செப்டம்பர் 28ம் தேதி தீர்ப்பு வழங்கியது. இந்த தீர்ப்புக்கு எதிராக கேரளாவில் மட்டுமல்லாமல், இந்து மதத்தைச் சேர்ந்த ஆன்மிகவாதிகள் பலரும் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.



இந்நிலையில் சபரி மலை ஐயப்பன் கோயிலில் அனைத்து பெண்களையும் அனுமதிக்கும் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யக் கோரி கேரளாவைச் சேர்ந்த நாயர் அமைப்பு உள்பட பல்வேறு அமைப்புகள், தனிநபர்கள் சார்பில் உச்சநீதிமன்றத்தில் சீராய்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு, இந்த வழக்கின் தீர்ப்பை ஒத்தி வைத்தது. இந்த வழக்கில், தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் தலைமையிலான அரசியல் சாசன அமர்வு நேற்று தீர்ப்பு அளித்தது. இந்த அமர்வில், நீதிபதிகள் ரோகிண்டன் பாலி நாரிமன், ஏ.எம்.கன்வீல்கர், டி.ஒய்.சந்திரசூட் மற்றும் இந்து மல்கோத்ரா ஆகியோரும் இடம்பெற்றனர்.

## நீதிபதிகள் தீர்ப்பில் கூறியதாவது:

மதம் சார்ந்த விவகாரத்தில் நீதிமன்றம் தலையிட விரும்பவில்லை. அதற்கு நாங்கள் மதிப்பளிக்கிறோம். மதம் என்றால் ஒவ்வொருவரின் தனிப்பட்ட உரிமையாகும். இதேபோல் தர்கா, மசூதி, சர்ச் என அனைத்திற்கும் பொருந்தும். அனைத்து மதத்தை சார்ந்தவர்களும் அவர்களின் மத நம்பிக்கைகளை கடைப்பிடிக்க உரிமையுள்ளது.

சபரிமலையில் மட்டுமின்றி, வேறு மதங்களை சார்ந்த வழிபாட்டு தலங்களிலும் பெண்களுக்கு தடை உள்ளது. சபரிமலை விவகாரத்தில் வழங்கப்பட்ட உத்தரவை கேரள அரசு உட்பட அனைவரும் விளம்பரத் திற்காக பயன்படுத்தி இருந்தது என்றுதான் நீதிமன்றம் கருதுகிறது. மதம் சார்ந்த விஷயங்களை விரிவாக ஆய்வு செய்ய வேண்டி உள்ளதால், இந்த வழக்கை உச்சநீதிமன்றத்தின் ஏழு நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்விற்கு மாற்றி பரிந்துரை செய்யப்படுகிறது.

## இவ்வாறு நீதிபதிகள் கூறியுள்ளனர்.

இத்தீர்ப்பில், சபரிமலையில் அனைத்து வயது பெண்களும் வழிபாட்டுக்கு செல்லலாம் என்ற முந்தைய உத்தரவிற்கு எந்தவித தடையும் விதிக்கப்படவில்லை. மேலும் 7 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வுக்கு இந்த மறுசீராய்வு வழக்கு மாற்றப்பட்டு உள்ளதால், அதில் இறுதி உத்தரவு பிறப்பிக்கப்படும் வரை தற்போதைய நிலை தொடரும். பெண்கள் சபரிமலைக்கு சென்று தரிசிக்கலாம்.

நேற்றைய தீர்ப்பில், தலைமை நீதிபதி உட்பட மூன்று நீதிபதிகள் மட்டும் இந்த வழக்கை 7 நீதிபதிகள் அமர்வுக்கு மாற்ற பரிந்துரை செய்துள்ளனர். நீதிபதிகள் ரோகிண்டன் பாலி நாரிமன், சந்திரசூட் ஆகியோர், அதுபோன்ற பரிந்துரையை செய்யவில்லை. இருப்பினும், பெரும்பான்மையான நீதிபதிகள் இந்த முடிவை விரும்பியதால், 7 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வுக்கு வழக்கு மாற்றப்படுகிறது. இதனால், சபரிமலை வழக்கில் இறுதி தீர்ப்பு வெளியாக மேலும் தாமதமாகும்.

# போர் விமான ஒப்பந்தத்தில் முறைகேடு இல்லை

## *ரபேல் சீராய்வு மனுக்கள் தள்ளுபடி உச்சநீதிமன்றம் தீர்ப்பு*

ரபேல் போர் விமானங்கள் வாங்கியதில் எந்தவித முறைகேடுகளும் நடைபெறவில்லை என தீர்ப்பு வழங்கிய உச்சநீதிமன்றம், அது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனுக்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

இந்திய விமானப் படைக்கு பிரான்சிடம் இருந்து 36 ரபேல் ரக போர் விமானங்களை ரூ. 56 ஆயிரம் கோடிக்கு வாங்க மத்திய அரசு ஒப்பந்தம் செய்துள்ளது.

இதில் பல ஆயிரம் கோடிக்கு ஊழல் நடந்துள்ளதாக காங்கிரஸ் உட்பட பல்வேறு எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டின. இந்த முறைகேடு குறித்து விசாரணை நடத்த உத்தரவிடக் கோரி, உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இதில் கடந்தாண்டு டிசம்பர் 14ம் தேதி அளிக்கப்பட்ட தீர்ப்பில், ஒப்பந்தத்தில் முறைகேடு நடக்கவில்லை. இந்த ஒப்பந்தம் பற்றி

## கவனத்துடன் பேசவேண்டும் ராகுல் காந்திக்கு கண்டிப்பு

'ரபேல் ஒப்பந்தத்தில் பிரதமர் மோடியை உச்சநீதிமன்றமே திருடன் என கூறிவிட்டது'. கடந்த மக்களவை தேர்தலின்போது அப்போதைய காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தி கடுமையாக விமர்சித்து வந்தார். இதற்கு எதிராக பாஜ எம்பி மீனாட்சி லேகி, நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு நேற்று தீர்ப்பு வழங்கியது. அதில், "இந்த விவகாரத்தில் ராகுல்காந்தி பல இடங்களில் தனது விமர்சன பேச்சுக்களை முன்வைத்துள்ளார். இதனை நீதிமன்றமும் கண்காணித்துள்ளது. இருப்பினும், அவரது மன்னிப்பை ஏற்று இந்த வழக்கு முடித்து வைக்கப்படுகிறது. ராகுல்காந்தி இனி வருங்காலங்களில் கூடுதல் கவனமுடன் பேசவேண்டும்," என்று கண்டித்து, நீதிபதிகள் இந்த வழக்கை முடித்து வைத்தனர்.



சிபிஐ விசாரிக்கவோ, நீதிமன்ற கண்காணிப்பில் தனி விசாரணை அமைப்பை ஏற்படுத்தவோ வேண்டிய அவசியம் கிடையாது. மேலும் விமானங்களை கொள்முதல் செய்வது அரசின் கொள்கை முடிவு என்பதால், அதில் நீதிமன்றம் தலையிட விரும்பவில்லை என கூறப் பட்டது.

இந்த தீர்ப்பை மறு ஆய்வு செய்யக்கோரி வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன், பாஜ மூத்த தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான, யஷ்வந்த் சின்கா ஆகியோர் கடந்த பிப்ரவரி 2ம் தேதி உச்சநீதிமன்றத்தில் சீராய்வு மனுக்கள் தாக்கல் செய்தனர். இந்த வழக்கில் இருதரப்பு வாதங்களை கேட்ட நீதிமன்றம், தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைத்தது.

இந்த நிலையில், இந்த வழக்கில் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய், நீதிபதிகள் எஸ்.கே. கவுல், கே.எம். ஜோசப் ஆகியோர் அடங்கிய அமர்வு நேற்று தீர்ப்பு அளித்தது.

அதில், ரபேல் போர் விமான ஒப்பந்த விவகாரத்தில் முறைகேடு எதுவும் நடைபெறவில்லை. இது குறித்து மத்திய அரசு தரப்பில் சீலிடப்பட்ட கவரில் எழுத்துப்பூர்வமாக விளக்கம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனால், இந்த விவகாரத்தில் வழங்கிய முந்தைய தீர்ப்பை நீதிமன்றம் உறுதி செய்கிறது. சீராய்வு மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன என உத்தரவிட்டது.

# படுகொலை செய்யப்படமுன் ராஜபக்ச அரசு குறித்து ஊடகவியலாளர் எழுதிய மரண சாசனம்!

இலங்கையிலிருந்து வெளியாகும் சண்டேலீடர் என்ற ஆங்கில வாரப்பத்திரிகையின் முதன்மை ஆசிரியராக பணியாற்றிய லசந்தவிக்ரமதுங்க 11-01-2009 வெளியாக வேண்டிய இதழுக்காக கடந்த ஜனவரி 7ம்தேதிஎழுதிய தலையங்கம் இது.

இதை எழுதிய அடுத்த நாளே அவர் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தனது மரணத்தின் பாதையை அறிந்திருந்த அவருடைய மரணசாசனமாக இந்த தலையங்கம் அமைந்துள்ளது.

ராணுவத்தைத் தவிர வேறு எந்த ஒரு தொழிலும் - தொழில்நிமித்தமாக - அந்ததொழில் புரிபவர்களின் உயிரை பலியாக கேட்பதில்லை; இலங்கையில் இந்த வகையில் பத்திரிகைத் தொழிலும் இருக்கிறது. கடந்த சில வருடங்களாக ஊடக சுதந்திரத்தின் மீதான தாக்குதல்கள் அதிகரித்துவருகிறது. மின்னணு மற்றும் அச்சுஊடக நிறுவனங்கள் எரிக்கப்படுவதும், வெடிகுண்டு தாக்குதலுக்கு உள்ளாவதும், மூடப்படுவதும், பலவந்தமாக நிறுத்தப்படுவதும் தொடர்கதையாகி வருகிறது. எண்ணற்ற செய்தியாளர்கள் தாக்கப்படுகின்றனர், மிரட்டப்படுகின்றனர், படுகொலை செய்யப்படுகின்றனர். இந்த அனைத்தும் - கடைசி அம்சம் உட்பட - எனக்கும் பொருந்தும் என்பது எனக்கு மிகவும் சிறப்பு செய்வதாக உள்ளது.

பத்திரிகைத் தொழிலில் மிக நீண்டகாலமாக நான் இருந்து வருகிறேன். உண்மையில், இந்த 2009ம் ஆண்டு, சண்டேலீடர் பத்திரிகையின் 15ம் ஆண்டாகும். இந்தக் காலகட்டத்தில் இலங்கையில் பலமாறுதல்கள் நடந்துள்ளன. அவற்றில்பெரும்பாலான மாற்றங்கள் விரும்பத்தக்கவை அல்ல என்பதை நான் உங்களுக்கு சொல்லித் தெரியவேண்டியதில்லை. எல்லையில் லாரத்ததாகம் கொண்டவர்களால் இரக்கமற்று தொடுக்கப்பட்ட உள்நாட்டுப் போரின் மத்தியில் நாம் இருக்கிறோம். பயங்கரவாதிகளாலோ, அரசாங்கத்தாலோ ஏவப்படும் பயங்கரவாதம் என்பது நமது அன்றாட நிகழ்ச்சியாகி விட்டது. சுதந்திரத்தை முடக்க விரும்பும் அரசு முக்கிய நடவடிக்கையாக படுகொலைகளை நிகழ்த்தி வருகிறது. இன்று பத்திரிகையாளர்கள் கொல்லப்படுகின்றனர்.

நாளை நீதிபதிகள் கொல்லப்படுவார்கள். இந்த இருதரப்பினருக்கும் ஆபத்துகள் அதிகரிக்கின்றன. நம்பிக்கைதான் குறைந்து வருகிறது.

இருந்தபோதிலும் ஏன் இந்த தொழிலை தொடர்ந்து செய்கிறோம் என்று நான் அவ்வப்போது ஆச்சரியப்படுவதுண்டு. நானும் ஒரு கணவன் தான். எனக்கும் மூன்று அருமையான குழந்தைகள் உள்ளனர். எனக்கும் கடமைகளும், பொறுப்புகளும் உள்ளன, நான் சட்டம் அல்லது பத்திரிகை ஆகிய எந்தத்துறையில் இருந்தாலும். ஆபத்துகளை விலை கொடுத்து வாங்குவது தேவைதானா? தேவையில்லை! என்றே பலரும் கூறுகின்றனர். நண்பர்கள் என்னை வழக்குரைஞர் தொழிலுக்குத் திரும்புமாறு கூறுகின்றனர். அத்தொழில் எனக்கு மேம்பட்ட மற்றும் பாதுகாப்பான வாழ்வைத்தரும் என்று அவர்கள் நம்புகின்றனர். மற்றவர்கள், குறிப்பாக இருதரப்பிலும் உள்ள அரசியல் தலைவர்கள் அரசியலுக்கு வருமாறு என்னை அழைக்கின்றனர், நான் விரும்பும் துறைக்கு என்னை அமைச்சராக்குவதாகவும் கூறுகின்றனர்.

இலங்கையில் பத்திரிகையாளர்கள் சந்திக்கும் ஆபத்துகளை உணர்ந்த வெளிநாட்டுத் தூதர்கள், என்னை இலங்கையிலிருந்து வெளியேறுமாறும் - அவர்கள் நாட்டில் பாதுகாப்பாக வசிக்குமாறும் அழைக்கின்றனர். எனக்கு முன்னால் பலவாய்ப்புகள் இருந்தாலும், அதில் ஒன்றைக்கூட நான் செய்வதாக இல்லை.

உயர்ந்த பதவி, புகழ், செல்வம், பாதுகாப்பு போன்றவை அழைத்தாலும், அவற்றிற்கெல்லாம் மேலாக உள்ளுணர்வின் அழைப்பே முக்கியமாக இருக்கிறது.

நாங்கள் என்ன பார்க்கிறோமோ அதை, அவ்வாறே மண்வெட்டி என்றோ, திருடன் என்றோ, கொலைகாரன் என்றோ அப்படியே எழுதுவதால் சண்டேலீடர் பத்திரிகை சர்ச்சைக்குரிய ஒன்றாக விளங்குகிறது. நாங்கள் வார்த்தை விளையாட்டுகளுக்கு பின்னே பதுங்குவதில்லை. நாங்கள் வெளியிடும் புலனாய்வு செய்திகள் அனைத்தும் உரிய ஆதாரங்களுடன் வெளியிடப்படுகின்றன. அதற்காக ஆபத்துவரும் வாய்ப்புகள் இருப்பது தெரிந்தும் எங்களுக்கு ஆதாரங்களை வெளிப்படுத்தும் சமூகப் பொறுப்புள்ள மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். நாங்கள் பல ஊழல்களை வெளிக் கொணர்ந்து இருந்தாலும் கடந்த 15 ஆண்டுகளில் நாங்கள் தவறு செய்துவிட்டதாக யாரும் நிரூபித்தது இல்லை. அதேபோல எங்களுக்கு எதிரான எந்த வழக்குகளும் வெற்றிகரமாக முடிக்கப்பட்டதும் இல்லை.

சுதந்திரமான பத்திரிகை என்பது கண்ணாடியாக இயங்கி ஒப்பனை இல்லாத உண்மையான சமூகத்தின் முகத்தை மக்களுக்குக் காட்டும். பத்திரிகைகளின் மூலமாகத் தான் நாட்டின் நிலை குறித்தும், நாட்டை நிர்வகிக்க தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் குறித்தும் மக்கள் அறிந்து கொள்ளமுடியும். இந்தத் தலைவர்கள் தான் குழந்தைகளுக்கு நல்ல எதிர்காலத்தை கொடுப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். சில நேரங்களில் இந்த கண்ணாடியின் மூலம் நீங்கள் பார்க்கும் உருவம் மகிழ்ச்சி அளிப்பதாக இல்லாமல் இருக்கிறது. இந்நிலைக்காக நீங்கள் முணுமுணுத்துக் கொண்டிருக்கும் வேளையில், உங்களுக்காக அந்தக் கண்ணாடியை தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கும் பத்திரிகையாளர்கள் மிகப்பெரும் ஆபத்தில் இருக்கின்றனர். இதுதான் எங்களுக்கான அழைப்பு - நாங்கள் புறக்கணிக்க முடியாத அழைப்பு.

ஒவ்வொரு பத்திரிகைக்கும் ஒவ்வொரு பார்வை இருக்கும், எங்கள் பார்வையை நாங்கள் மறைத்ததில்லை. இலங்கையை ஒரு வெளிப்படையான, மதசார்பற்ற, சுதந்திர ஜனநாயக நாடாக நாங்கள் பார்க்கவிரும்பினோம். இந்த வார்த்தைகளுக்கு உள்ளே இருக்கும் பொருளை கவனியுங்கள். வெளிப்படையாக என்றால் அரசு என்பது மக்களுக்கு பதில் சொல்ல கடமைப்பட்டதாக, அரசு மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை தவறாகப் பயன்படுத்தாததாக இருக்கவேண்டும். மதசார்பின்மை என்பது, பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட - பல கலாசாரங்களைக் கொண்ட நம்முடைய சமூகத்தில் நாம் அனைவரும் ஒன்றிணைவதற்கான முக்கியமான கருத்தாகும். சுதந்திரம் என்பது, மனிதர்கள் பலவிதங்களில் வித்தியாசமாக படைக்கப்பட்டுள்ளனர் என்பதையும், அவர்கள் இருக்கும் முரண்பட்ட விதங்களிலேயே ஏற்றுக்கொள்வதுமாகும். நாம் விரும்பும் விதத்தில் அவர்கள் இருக்க வேண்டும் என்று கூறுவதல்ல. மேலும் ஜனநாயகம் என்பது... இது ஏன் முக்கியமானது? என்பதையும் நான் விளக்க வேண்டும் என்று எதிர்பார்த்தால், மன்னிக்கவும்! நீங்கள் இந்தப் பத்திரிகையை வாங்குவதை நிறுத்திவிடுவதே நல்லது.

பெரும்பாலானவர்கள் ஆதரிக்கிறார்கள் என்பதற்காக ஒரு கருத்தை கேள்வி கேட்காமல் எழுதுவதன் மூலம் - பிரதிபலிப்பதன் மூலம் சண்டேலீடர் பத்திரிகை பாதுகாப்பு தேடியதில்லை. கருத்து முரண்பாடுகளை எதிர்கொள்வதன் மூலமாகவே இதுவரை பத்திரிகையை நடத்தி வந்திருக்கிறோம். இத்தனை ஆண்டுகளாக நாங்கள் கூறிய கருத்துகள் மக்களில் பலருக்கும் சுவை அளிப்பதாக இல்லை என்பது தெரியும். உதாரணமாக, தனிநாடு கேட்கும் தீவிரவாதத்தை ஒடுக்கும்

அதேநேரத்தில், பயங்கரவாதத்திற்கான மூலகாரணங்களை கண்டறிந்து அவற்றையும் களையவேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். மேலும் இலங்கை இனப்பிரச்சினையை பயங்கரவாத பூதக்கண்ணாடி மூலமாக மட்டுமே பார்க்காமல், வரலாற்று நோக்கிலும் இந்தப் பிரச்சினையை பரிசீலிக்க வேண்டும் என்றும் கூறி வருகிறோம். பயங்கவாதத்திற்கு எதிரான போர் என்று கூறிக்கொண்டு சொந்த நாட்டு மக்கள் மீதே குண்டுகளை வீசி படுகொலை செய்வதை வழக்கமாக கொண்டுள்ள நாடு உலகிலேயே இலங்கை ஒன்று தான் என்பதையும் எடுத்துக்கூறி அதை எதிர்த்து வருகிறோம். இத்தகைய கருத்துகளுக்காக நாங்கள் தேசவிரோதிகள் என்று முத்திரை குத்தப்படுகிறோம். இது உண்மையிலேயே தேசவிரோதம் என்றால் அதைப் பெருமிதத்துடன் ஏற்கிறோம்.

சண்டேலீடர் பத்திரிகைக்கு அரசியல் நோக்கம் இருப்பதாக பலரும் கருதுகின்றனர். ஆனால் உண்மையில் அப்படி இல்லை. எதிர்க்கட்சிகளை விமர்சனம் செய்வதைவிட தீவிரமாக அரசை விமர்சனம் செய்வது ஏனென்றால், கிரிக்கெட் விளையாட்டில் பேட்ஸ்மேனை தவிர்த்து, பீல்டிங் பகுதியில் பந்து வீசுவதில்லையோ, அதேபோல் ஆட்சியில் உள்ளவர்களுக்கு எதிராகத்தான் தீவிரமாக விமர்சனங்களை வைக்கமுடியும்; எதிர்கட்சிகள் மீதல்ல. கடந்த காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்த போதும், அந்த ஆட்சியின் அத்துமீறல்களை, ஊழல்களை வெளிக்கொணர்ந்து அன்றைய ஆட்சியின் தொண்டையில் சிக்கியமுள்ளாக நாங்கள் இருந்தோம். இத்தகைய எங்களின் போக்கும் அந்த ஆட்சி வீழக்காரணமாக இருந்தது.

போரை நாங்கள் எதிர்க்கிறோம் என்பதற்காக நாங்கள் தமிழீழ விடுதலைப்புலிகளை ஆதரிக்கிறோம் என்று அர்த்தமில்லை. உலகில் உள்ள மிகவும் இரக்கமற்ற - ரத்த வேட்கை கொண்ட இயக்கங்களில் ஒன்றாக அந்த இயக்கம் இருக்கிறது. அந்த இயக்கம் அழிக்கப்படவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. ஆனால் அவ்வாறு கூறுவதால், தமிழ் மக்களின் மனித உரிமைகளை பறிப்பதையும், அவர்கள் மீது இரக்கமற்று துப்பாக்கிச்சூடு மற்றும் குண்டு மழைபொழிவதையும் ஏற்கமுடியாது. ஏனெனில் அது தவறானது மட்டுமல்ல, புத்தரின் தர்மத்தை பாதுகாப்பதாகக் கூறும் நாம் வெட்கப்பட வேண்டியதும் ஆகும். இத்தகைய அத்துமீறிய தாக்குதல்கள், செய்தித் தணிக்கை காரணமாக பொது மக்களுக்கு உரிய முறையில் சென்று சேர்வதில்லை.

இதைவிட நாட்டின் வடக்கு-கிழக்குப் பகுதியில் குவிக்கப்பட்டுள்ள

ராணுவத்தின் காரணமாக அப்பகுதியில் வசிக்கும் தமிழ் மக்கள், அவர்களின் சுயமரியாதையை இழந்து, நிரந்தரமாக இரண்டாம் தர குடிமக்களாக வசிக்க வேண்டிய அவலமும் ஏற்பட்டுள்ளது. போர் முடிந்தபின்னர், அப்பகுதியில் மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்வதன் மூலம் சீற்றத்தை தணிக்க முடியும் என்று கனவு காணக்கூடாது. இந்தப் போரின் ரணங்கள் நிரந்தர வடுக்களை ஏற்படுத்தி விடும். இதன் விளைவாக தமிழ் மக்களிடம் மேலும் கசப்புணர்வும், வெறுப்புணர்வுமே ஏற்படும். அதை சமாளிப்பது எளிதல்ல. அரசியல் ரீதியாக தீர்வு காணக்கூடிய ஒரு பிரச்சனை, அனைத்து தரப்பு மக்களையும் துன்புறுத்தக் கூடிய சீழ்ப்பிடித்த கொடுங்காயமாக மாறிவிடும். நான் கோபமடைந்தும், சலிப்புற்றும் இருக்கிறேன் என்றால், எனது நாட்டு பெரும்பான்மைமக்களும் - முழு அரசும் - வெளிப்படையாகத் தெரியும் இந்த உண்மையை பார்க்கத் தவறுவதால் தான்.

நான் இரண்டுமுறை தாக்கப்பட்டதும், எனது வீடு துப்பாக்கி குண்டுகளால் துளைக்கப்பட்டதும் அனைவருக்கும் தெரியும். இந்த சம்பவங்கள் குறித்து உரிய விசாரணை நடத்துவதாக அரசுத்தரப்பில் உறுதி அளிக்கப்பட்டாலும், இந்த தாக்குதல் குறித்த விசாரணை நடத்தி, இந்தத் தாக்குதலுக்கு காரணமானவர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. இந்த அனைத்து சம்பவங்களும் அரசின் தூண்டுதல் காரணமாகவே நடந்தது என்று நான் நம்புவதற்கு காரணங்கள் உள்ளன. இறுதியில் நான் கொல்லப்பட்டால், அரசு தான் என்னை கொன்றிருக்க வேண்டும்.

இதில் துயரமான வேடிக்கை என்னவென்றால், நானும் மஹிந்தாவும் கடந்த கால்நூற்றாண்டாக நண்பர்களாக இருப்பது பொதுமக்களில் பலருக்கும் தெரியாது. அவரை அவரது முதல் பெயரான 'மஹிந்தா' என்ற பெயரிலும், சிங்களமொழியில் அழைக்கும் 'ஓயா' என்று அவரை இன்றும் அழைக்கும் மிகச் சிலரில் நானும் ஒருவனாக இருப்பேன். அதிபர் மாதத்திற்கு ஒருமுறை பத்திரிகை ஆசிரியர்களை சந்திக்கும் கூட்டத்திற்கு நான் செல்வதில்லை. எனினும் சில பின்னிரவு நேரங்களில் தனியாகவோ, நெருங்கிய நண்பர்கள் சிலருடனோ அதிபரின் இல்லத்திலேயே சந்தித்து அரசியலைப்பற்றியும், பழைய இனிமையான நாட்களைப் பற்றியும் பேசுவதுண்டு. இந்த இடத்தில் சில குறிப்புகளை கூறவிரும்புகிறேன்.

நண்பர்மஹிந்த!

கடந்த 2005ம் ஆண்டில் இலங்கை சுதந்திரக் கட்சியின் அதிபர் வேட்பாளராக நீங்கள் உருவெடுத்தபோது, எங்கள் பத்திரிகையைப் போல இதமான வரவேற்பு உங்களுக்கு வேறு எங்கும் கிடைக்கவில்லை.

உண்மையில் உங்கள் முதல் பெயரை குறிப்பிடுவதன் மூலம் பல்லாண்டாக நடைமுறையில் இருந்த சம்பிரதாயங்களை உடைத்தோம். மனித உரிமைகள் மற்றும் சுதந்திரம் மீது அப்போது நீங்கள் கொண்டிருந்த கொள்கைகளுக்காக உங்களை நாங்கள் வரவேற்றோம். ஆனால் 'ஹம்படா'வுக்கு உதவும் முறைகேட்டில் நீங்கள் முட்டாள்தனமாக ஈடுபட்டபோது நாங்கள் கனத்த இதயத்தோடு அதை வெளியிட்டோம். மேலும் முறைகேடு செய்யப்பட்ட பணத்தை திருப்பி அளிக்கும்படியும் வலியுறுத்தினோம். அதை நீங்கள் பலவாரங்கள் கடந்து செய்தீர்கள். உங்கள் மீதான நன்மதிப்பில் மிகப்பெரும் தீயவிளைவை அது ஏற்படுத்தியது. அது உங்களை இன்றளவும் துரத்தி வருகிறது.

Rajapakse அதிபர் பதவி மீது உங்களுக்கு ஆர்வமில்லை என்று நீங்களே என்னிடம் கூறி இருக்கிறீர்கள். நீங்கள் அதிபர் பதவியைத் தேடி செல்லவில்லை: அப்பதவி தங்கள் மடியில் விழுந்தது. உங்கள் மகன்களே உங்களின் மகிழ்ச்சி என்றும், அரசு நிர்வாகத்தை உங்கள் சகோதரர்களிடம் ஒப்படைத்துவிட்டு, உங்கள் மகன்களோடு நேரத்தை செலவிடுவதே உங்களுக்கு விருப்பமானது என்றும் நீங்கள் கூறியிருக்கிறீர்கள். இப்போது எனது மகனுக்கும், மகளுக்கும் தந்தை இல்லாது போகும் சூழலில் அரசு நிர்வாகத்தை செம்மையாக நடத்துவது யார் என்பது அனைவருக்கும் தெரியவருகிறது.

எனக்கு மரணம் ஏற்படும்போது, நீங்கள் வழக்கமான சடங்குச் சொற்களை கூறுவதோடு, முழுமையான விசாரணை செய்யுமாறு காவல்துறைக்கு உத்தரவிடுவீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் இதேபோன்ற மற்ற சம்பவங்களில் நடந்ததைப் போல இந்த விசாரணையிலும் எந்த உண்மையும் வெளிவராது என்பதும் எனக்குத் தெரியும். ஆனால் உண்மையைச் சொன்னால், எனது மரணத்திற்குப் பின்னால் யார் இருப்பார்கள் என்பது நாம் இருவருக்கும் தெரியும். அந்த பெயரைச் சொல்லும் துணிவு உங்களுக்கு இல்லாவிட்டாலும் கூட. ஏனெனில் என் வாழ்க்கையோடு, உங்கள் வாழ்க்கையும் அந்த உண்மையில் சிக்கியிருக்கிறது.

இலங்கை தேசம் குறித்து நீங்கள் இளமையில் கண்ட கனவுகள், நீங்கள் அதிபராகப் பதவியேற்ற இந்த மூன்று ஆண்டுகளில் உடைந்த செங்கற்களைப் போல தூள்தூளாகி விட்டது. தேசபக்தி என்ற பெயரில் மனித உரிமைகளைப் பறிப்பதிலும், ஊழல்சாம்ராஜ்யத்தை உருவாக்கியதிலும், பொதுமக்களின் வரிப்பணத்தை சூறையாடியதிலும் மற்றெந்த அதிபரையும்விட நீங்களே மிஞ்சி இருக்கிறீர்கள். உண்மையைச்

சொல்லப் போனால், பொம்மை கடையில் இறக்கி விடப்பட்ட குழந்தையைப் போல நீங்கள் இருக்கிறீர்கள். ஆனால் அந்த உதாரணம்கூட உங்களுக்குப் பொருந்தாது. ஏனெனில் நீங்கள் இந்த மண்ணில் ஏற்படுத்திய ரத்தக் கறையையும், குடிமக்களின் மனித உரிமைகளைப் பறித்ததையும் போல எந்தக் குழந்தையாலும் செய்யமுடியாது. நீங்கள் பதவி போதையில் மூழ்கி இருப்பதை உங்களால் உணரமுடியாது: இந்த போதை தலைக்கேறிய நிலையில் உங்கள் மகன்கள் இருப்பதைப் பார்த்து நீங்கள் வருந்தும்நிலை ஏற்படலாம். அது துயரத்தை கொண்டு வரும். என்னைப் பொறுத்தவரை, தெளிவான மனநிலையில் என்னைப் படைத்தவனிடம் நான் செல்கிறேன். உங்களுக்கான நேரம் இறுதியாக வரும்போது, நீங்களும் அதையே செய்வீர்கள் என்று நம்புகிறேன். அதை விரும்புகிறேன்.

என்னைப் பொறுத்தவரை, நான் எந்த தனிமனிதனுக்கும் பணியாமல், தலைநிமிர்ந்து வாழ்ந்த நிறைவு இருக்கிறது. நான் இந்தப்பாதையில் தனியே பயணம் செய்யவில்லை. சக பத்திரிகையாளர்களும் என்னோடு பயணம் செய்துள்ளனர். அவர்களில் பலர் கொல்லப்பட்டுள்ளனர்; விசாரணையின்றி சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்; தூரதேசங்களுக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர். அதிபரான நீங்கள் முன்னொரு காலத்தில் எந்த பத்திரிகை சுதந்திரத்திற்காக பாடுபட்டீர்களோ, அதே பத்திரிகை சுதந்திரத்திற்காக தற்போது பாடுபடும் மேலும் சில பத்திரிகையாளர்கள் மரணத்தின் நிழலில் உள்ளனர். எனது மரணம் தங்கள் கண்காணிப்பின் கீழ் நிகழ்வதை நீங்கள் மறுக்கவே முடியாது. எனது கொலையாளிகளை நீங்கள் பாதுகாப்பதைத் தவிர வேறுவாய்ப்பில்லாத நிலையில் நீங்கள் இருப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும். அவர்கள் எப்போதும் தண்டிக்கப்படாத வகையில் நீங்கள் பார்த்துக் கொள்வீர்கள் என்பதும் எனக்குத் தெரியும். உங்களுக்கு வேறுவழியே இல்லை. உங்களுக்காக நான் வருந்துகிறேன். உங்களைப் பதவியில் அமர்த்தியுள்ள உங்கள் குடும்பத்தினர், உங்கள் பாவங்களுக்காகவும் கடவுளிடம் நீண்டநேரம் முழந்தாளிட்டு பாவமன்னிப்பு கேட்பார்கள்.

சண்டேலீடர் பத்திரிகையின் வாசகர்களுக்கு சொல்ல விரும்புவது என்னவென்றால், எங்கள் பணியில் துணை நின்றதற்காக உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சிறுபான்மையினரின் நலன்களுக்காக, குரல் எழுப்பக்கூட நாதியற்றவர்களுக்காக குரல் கொடுத்திருக்கிறோம். வேர்களை மறந்துவிட்டு தலைகொழுத்துத் திரிபவர்களின் ஊழல்களை வெளிப்படுத்தி உங்கள் வரிப்பணம் விரயமாக்கப்படுவதை அம்பலப்படுத்தி இருக்கிறோம்.

அரசுத் தரப்பில் கூறப்படும் பிரச்சாரங்களுக்கு மாற்றாக உண்மை நிலையை உணர்த்தி இருக்கிறோம். இதற்கான விலையை ஒருநாள் கொடுக்க வேண்டும் என்று எனக்கு எப்போதும் தெரியும். அதனை நானும் - என் குடும்பத்தினரும் தற்போது கொடுக்கிறோம். நான் அதற்கு எப்போதும் தயாராகவே இருக்கிறேன். இதனைத் தடுக்க நான் எதையும் செய்யவில்லை; முன்னெச்சரிக்கையோ, பாதுகாப்போ இல்லை. ஆயிரக்கணக்கான படுகொலைகளைக் கண்டிக்கும் போது மனித கேடயங்களின் பின்பதுங்கிக் கொள்ளும், எனது கொலையாளியைப் போல நான் கோழை இல்லை என்பதை அவன் உணரவேண்டும் என்று விரும்புகிறேன். எனது உயிர் யாரால் எப்படி கவரப்படும் என்பது முன்னரே தீர்மானிக்கப்பட்டுவிட்டது. அது எப்போது நடைபெறும் என்பதுதான் மீதமுள்ள கேள்வி.

சண்டேலீடர் பத்திரிகை தனது அறம் சார்ந்த யுத்தத்தை தொடர்ந்து நடத்தும் என்பதும் ஏற்கனவே எழுதப்பட்டுவிட்டது. நான் இந்தப் பணியில் தனித்து செயல்படவில்லை. இந்த பத்திரிகை வீழ்த்தப்படுவதற்கு முன்னர் எங்களில் பலர் கொல்லப்பட வேண்டும் - கொல்லப்படுவார்கள். அதுவரை சண்டேலீடர் பத்திரிகை மக்களுக்காகப் போராடும். எனது கொலை பத்திரிகை சுதந்திரத்தின் மீதான தாக்குதலாக கருதப்படாமல், கருத்துரிமைக்காக தொடர்ந்து பணியாற்றும் பத்திரிகையாளர்களுக்கான தூண்டுதலாக செயல்படும் என்று நம்புகிறேன். இன்னும் சொல்லப்போனால் எனது கொலை, இலங்கையில் மனித விடுதலைக்கான புதிய யுகத்தை படைப்பதற்காக போராடும் சக்திகளை இணைக்க உதவி செய்யும் என்றும் நம்புகிறேன். தேசபக்தியின் பெயரால் பலபடுகொலைகள் நடந்தாலும், மனிதநேயம் மேலும் செழித்து வளரும் என்றும் அது அதிபரின் கண்களைத் திறக்கும் என்றும் நம்புகிறேன். எத்தனை ராஜபக்சேக்கள் சேர்ந்தாலும் மனிதநேயத்தை அழித்துவிட முடியாது.

நான் இத்தகைய ஆபத்தான முயற்சிகளில் இறங்கவேண்டுமா என்று பொதுமக்கள் பலரும் என்னிடம் கேட்டுள்ளனர். காலம் மாறும்போது இந்த அநீதிகளும் மாறிவிடும் என்றும் அவர்கள் கூறுகின்றனர். எனக்கும் அது தெரியும்: அது தவிர்க்க முடியாததும்கூட. ஆனால் இப்போது நாம் பேசாவிட்டால், பின்னர் பேசுவதற்கு யாரும் மிஞ்சாமலே போய்விடக் கூடும். அவர்கள் சிறுபான்மையினராக, ஒடுக்கப்பட்டவர்களாக, வாய்ப்பு மறுக்கப்பட்டவர்களாக இருக்கலாம்.

ஜெர்மானிய மதத்தத்துவாதியாகிய மார்ட்டீன் நீய்மொல்லர் என்பவரின் வாழ்க்கை அனுபவமே எனது பத்திரிகை வாழ்க்கை முழுக்க எனது உந்துசக்தியாக செயல்பட்டு வந்தது. யூதர்களுக்கு எதிரான கருத்து

கொண்ட இவர், இளமைக் காலத்தில் ஹிட்லரின் ஆதரவாளராக இருந்தார். ஹிட்லர் தலைமையிலான நாஜிக்கள் ஜெர்மனியை கைப்பற்றியவுடன், ஹிட்லரின் கொள்கை யூதர்களை மட்டுமே அழிப்பதல்ல என்பதையும், ஹிட்லருக்கு எதிரான கருத்து கொண்ட அனைவரையும் அழிப்பதே ஹிட்லரின் நோக்கம் என்பதையும் புரிந்துகொண்டார். ஹிட்லருக்கு எதிரான கருத்துகளைக் கூறிய மார்ட்டீன் நீய்மொல்லரும் நாஜிப்படையால் பிடிக்கப்பட்டு 1937 முதல் 1945 வரை சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். அவர் படுகொலை செய்யப்படுவதற்கு முன் எழுதிய கவிதையை நான் என் இளம்பருவத்தில் படித்தேன். என் நெஞ்சில் நிலைத்த அந்த கவிதை இதோ:

*முதலில் அவர்கள் யூதர்களைப் பிடிக்க வந்தனர்.*
*நான் பேசவில்லை: ஏனெனில் நான் யூதன் அல்ல.*
*பின்னர் அவர்கள் கம்யூனிஸ்டுகளைப் பிடிக்க வந்தனர்.*
*நான் பேசவில்லை: ஏனெனில் நான் கம்யூனிஸ்ட் அல்ல.*

பின்னர் அவர்கள் தொழிற்சங்கவாதிகளைப் பிடிக்க வந்தனர். அப்போதும் நான் பேசவில்லை: ஏனெனில் நான் தொழிற்சங்கவாதியும் அல்ல.

பின்னர் அவர்கள் என்னைப் பிடிக்க வந்தனர்.

அப்போது எனக்காக பேச யாருமே இல்லை.

நீங்கள் எதை மறந்தாலும் இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். சண்டேலீடர் பத்திரிகை உங்களுக்காக உள்ளது. நீங்கள் சிங்களராக, தமிழராக, இஸ்லாமியராக, தாழ்த்தப்பட்ட சாதியினராக, ஓரினப்புணர்ச்சியாளராக, எதிர்கருத்து கொண்டவராக அல்லது ஊனமுற்றவராக இருக்கலாம். உங்களுக்காக போராடுவதற்கு, அதிகாரத்திற்கு அடிபணியாமல் - அச்சமில்லாமல், தைரியமாக செயல்படுவதற்கு சண்டேலீடரின் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இதுவெறும் வார்த்தையல்ல. பத்திரிகையாளரான எங்கள் தியாகங்கள் எங்கள் பெயருக்கும், புகழுக்கும் செய்யப்பட்டதல்ல; அது உங்களுக்காக செய்யப்பட்டது. அந்ததியாகத்திற்கான தார்மீகத் தகுதி உங்களுக்கு இருக்கிறதா என்பது வேறு விவகாரம். என்னைப் பொறுத்தவரை நான் அதற்கு முயற்சி செய்தேன் என்பது கடவுளுக்குத் தெரியும்.

*-லசந்த*

*(சண்டேலீடர்பத்திரிகைஆசிரியர் )*

*தமிழ்மொழிப்பெயர்ப்பு :*

*வழக்கறிஞர்சுந்தர்ராஜன்*

# செய்தியாளர்களை கொலை செய்தவர்களில் 90 சதவீதம் பேர் தண்டிக்கப்படவில்லை: யுனெஸ்கோ

பன்னாட்டு அளவில் செய்தியாளர்கள் கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர்களில் 90 சதவீதம் பேர் தண்டிக்கப்படவில்லை என்று யுனெஸ்கோ அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

கடந்த 2006-ஆம் ஆண்டிலிருந்து 2018-ஆம் ஆண்டு வரை உலகம் முழுவ தும் பயங்கரவாதம், போர், வன்முறை உள்ளிட்ட சம்பவங்களில் 1,109 செய்தியாளர்கள் கொல்லப்பட்டனர். அவர்கள் கொலையில் சம்பந்தப்பட்டவர்களில் 90 சதவீதம் பேர் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்கப்படவில்லை.

போர் இல்லாத பகுதிகளிலும் கடந்த இரண்டு ஆண்டுகளாக 55 சதவீத செய்தியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.அரசியல், குற்றம், ஊழல் ஆகியவை குறித்து செய்திகளை எழுதும் செய்தியாளர்கள் கொல்லப்படுகிறார்கள். கடந்த 5 ஆண்டுகளில் செய்தியாளர்கள் கொலை செய்யப்படுவது அதிகரித்து உள்ளது.

அரபு நாடுகளில்தான் 30 சதவீத செய்தியாளர்களும், லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியனில் 26 சதவீத செய்தியாளர்களும், ஆசிய-பசிபிக் நாடுகளில் 24 சதவீத செய்தியாளர்களும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டைக் காட்டிலும் நிகழாண்டில் இதுவரை செய்தியாளர்கள் கொலை செய்யப்பட்ட எண்ணிக்கை குறைந்தே காணப்படுகிறது. கொலை செய்யப்பட்ட செய்தியாளர்களில் 93 சதவீதம் பேர் உள்ளூர் செய்தியாளர்கள் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க அதிபர் தேர்தல்:

## டிரம்பை எதிர்த்து பிரபல தொழிலதிபர் போட்டி?

அமெரிக்காவில் அடுத்த ஆண்டு நவம்பர் மாதம் 3ஆம் தேதி அதிபர் தேர்தல் நடக்கிறது. இந்த தேர்தலில் குடியரசு கட்சி சார்பில் தற்போதைய அதிபர் டிரம்ப் மீண்டும் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து, ஜனநாயக கட்சியின் சார்பில் போட்டியிடப்போவது யார்? என்பதுதான் அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

ஜனநாயக கட்சி வேட்பாளருக்கான போட்டியில் முன்னாள் துணை அதிபர் ஜோ பிடென், இந்திய வம்சாவளியை சேர்ந்த பெண் நாடாளுமன்ற உறுப்பினர் கமலா ஹாரிஸ் உள்பட 17 பேர் களத்தில் இருக்கிறார்கள்.

இந்த நிலையில் பிரபல தொழில் அதிபரும், அமெரிக்காவின் 9ஆவது மிகப்பெரிய பணக்காரருமான மைக்கேல் புளூம்பெர்க் (வயது 77) ஜன நாயக கட்சியின் வேட்பாளருக்கான போட்டியில் நுழைய இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

அதிபர் தேர்தலில் டிரம்பை வீழ்த்துவதற்கு தற்போதைய வேட்பாளர்கள் களம் போதுமானதாக இல்லை என்று நியூயார்க் நகர முன்னாள் மேயரான மைக்கேல் புளூம்பெர்க் கவலை கொள்வதாக அவரது ஆலோசகர் ஹோவர்ட் வொல்ப்சன் தெரிவித்துள்ளார். ஜனநாயக கட்சியின் வேட்பாளருக்கான போட்டியில் முறைப்படி இணைவதற்கான ஆவணங்களை இன்னும் ஓரிரு நாட்களில் அலபாமா மாகாணத்தில் மைக்கேல் புளூம்பெர்க் தாக்கல் செய்வார் என ஹோவர்ட் வொல்ப்சன் கூறினார்.

இது குறித்து ஹோவர்ட் வொல்ப்சன் கூறுகையில், "நாம் இப்போது வேலையை முடித்து டிரம்ப் தோற்கடிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். ஆனால் அதை செய்யும் அளவுக்கு வேட்பாளர் களம் இல்லை என மைக்கல் புளும்பெர்குக்கு பெரிய கவலை உள்ளது" என்றார். மேலும் "மைக்கேல் புளூம் பெர்க்கின் சாதனை, தலைமை மற்றும் மாற்றத்தை உண்டாக்குவதற்கு மக்களை ஒன்றிணைக்கும் திறன் ஆகிய வற்றின் அடிப்படையில், அவர் டிரம்பை எதிர்த்து போராடி வெற்றி பெற முடியும்" என கூறினார்.

தொழிலதிபர், அரசியல்வாதி, எழுத்தாளர் மற்றும் சிறந்த நன்கொடையாளர் என பல்வேறு முகங்களை கொண்ட மைக்கேல் புளூம் பெர்க்கின் தற்போதைய சொத்து மதிப்பு **53** பில்லியன் டாலர் ( இந்திய மதிப்பில் ரூ.**3** லட்சத்து **71** ஆயிரம் கோடி) ஆகும்.இது அதிபர் டிரம்பின் சொத்து மதிப்பை விட **17** மடங்கு அதிகமாகும். ஆரம்ப காலத்தில் வங்கி ஊழியராக பணியாற்றி வந்த இவர் தனது பெயரில் நிதி நிறுவனத்தை தொடங்கி தொழில்துறையில் தனக்கென ஒரு சாம்ராஜ்யத்தை உருவாக்கி உள்ளார்.



ஜனநாயக கட்சியில் இணைந்து தனது அரசியல் அத்தியாயத்தை தொடங்கிய இவர், **2001**ஆம் ஆண்டு குடியரசு கட்சிக்கு தாவி நியூயார்க் நகர மேயர் பதவிக்கு போட்டியிட்டார். அதில் வெற்றி பெற்ற இவர் **2012**ஆம் ஆண்டு வரை தொடர்ந்து **3** முறை நியூயார்க் நகர மேயராக பதவி வகித்தார். அதன்பிறகு கடந்த ஆண்டு இவர் தனது தாய்க் கட்சியான ஜனநாயக கட்சிக்கு மீண்டும் திரும்பினார்.

ஜனநாயக கட்சி வேட்பாளருக்கான போட்டியில் இவர் இணையும் பட்சத்தில் கடந்த காலங்களில் இல்லாத வகையில் இந்த போட்டி கடுமையானதாக இருக்கும் என அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

இவர் அதிபர் தேர்தலுக் கான போட்டியில் களம் இறங்க விரும்புவது இது முதல் முறை அல்ல.இதற்கு முன் இவர் பலமுறை போட்டியிட விரும்பினாலும், பணபலம் படைத்த ஒரு தொழிலதிபரை மக்கள் அதிபராக தேர்ந்தெடுக்கமாட்டார்கள் என்ற எண்ணம் அவருக்கு இருந்ததால் கடைசி நேரத்தில் தனது விருப்பத்தை மாற்றிக்கொண்டார்.

ஆனால் இப்போது அவருக்கு அந்த தயக்கம் இல்லை. ஏனென்றால் தற்போதைய அதிபர் டிரம்ப் அமெரிக்காவின் மிகப்பெரிய தொழில திபர்களில் ஒருவராக இருந்தவர் ஆவார்.எனவே டிரம்பை போல் தனக்கும் மக்கள் ஆதரவு அளிப்பார்கள் என்ற நம்பிக்கையில் அதிபர் தேர்தலுக்கான போட்டியில் மைக்கேல் புளூம்பெர்க் களம் இறங்க முடிவு செய்திருக்கிறார்.

# Mastodonக்கு குடிபெயரும் டுவிட்டர்வாசிகள்: காரணம் என்ன?

*டுவிட்டரை பயன்படுத்திவருபவர்கள் சினம் கொண்டுஅதிலிருந்து வெளியேறி Mastodon எல்ற சமூகவலைத்தளத்துக்கு மாற்றமடைந்து வருகின்றனர். இதன்காரணம் என்ன என்பதை இத்தொகுப்பில் அறிந்துகொள்வோம்.*

கணக்குகளை திடீரென சஸ்பெண்ட் செய்யும் டுவிட்டரின்போக்கு மற்றும் அதன் கணக்குகளை வெரிஃபைட் செய்யும்விவகாரங்களால் அதிருப்தி அடைந்துள்ள பெருமளவு டுவிட்டர்வாசிகள் Mastodon எனப்படும் ஓபன் சோர்ஸ்தளத்துக்கு மாறிச் செல்லத்தொடங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. உச்சநீதிமன்ற வழக்கறிஞர் சஞ்சய் ஹெக்டேவின் ட்விட்டர்கணக்கு இரண்டு முறை சஸ்பெண்ட்செய்யப்பட்டபோது இந்த பிரச்சனை வெளியுலகத்துக்கு வந்தது. வெறுக்கத்தக்க அல்லது முக்கியமான உள்ளடக்கம் கொண்ட தகவல்களை பகிர்ந்ததால் ஹெக்டேவின் கணக்கை முதல் முறை விதிமுறைகளை மீறியதாக ட்விட்டர் சஸ்பெண்ட் செய்தது. பின்னர் ஆட்சேபிக்கத்தக்க தகவல் ஒன்றை ரீட்வீட் செய்ததற்காக இரண்டாவது முறையாக அவரின் கணக்கு சஸ்பெண்ட் செய்யப்பட்டது.

இதனிடையே குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்த செயற்பாட்டாளர்கள் சிலரின் கணக்குகளை தகுந்தகாரணமின்றி ட்விட்டர் முடக்கி வைத்ததாககுற்றச்சாட்டு எழுந்த நிலையில், தாங்கள் அதுபோன்று பாரபட்சமாக செயல்படுவது இல்லை என்று ட்விட்டர் மறுப்பு தெரிவித்தது. இந்த பிரச்சனைகளை தொடர்ந்தே தற்போது இந்திய அளவில் பலரும் ட்விட்டரை விட்டு விலகி, இலவசமாக

கிடைக்கும் சமூக வலைத்தளமான 'Mastodon'க்கு நகர்ந்து வருகின்றனர். இதுவரை 2.2 மில்லியன் பேர் Mastodonä பயன்படுத்தி வருவதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. (ட்விட்டரை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 300 மில்லியனுக்கும் அதிகம்)

## Mastodon - Twitter: வேறுபாடு என்ன?

ஜெர்மனியை சேர்ந்த மென்பொறியாளர் Eugen Rochko என்பவர் 2016ம் ஆண்டில் உருவாக்கிய ஓபன் சோர்ஸ் சமூக வலைத்தளம் தான் Mastodon. இது லினக்ஸ் போன்று செயல்படும் ஒரு ஓபன் சோர்ஸ்

மென்பொருள் என்பதால் பயனர்கள் தாங்களாகவே சர்வர்களை நிர்மாணித்துக் கொண்டு தங்களுக்கென சமுதாயங்களை (Community) உருவாக்கிக்கொண்டு செயல்படலாம்.

Facebook, Twitter போன்று இது ஒரு நிறுவனத்தின் கீழ் இயங்குவதில்லை. இதனுடைய தரவுகளும் ஒரேஇடத்தில் அல்லாமல் பல இடங்களில் சேமித்து வைக்க முடியும் என்பதால் பாதுகாப்பு பிரச்சனைகள் எழுவதில்லை.


## Mastodon -ல் எப்படி கணக்கு தொடங்குவது:

பிற சமூக வலைத்தளங்கள் போல Mastodonல் கணக்கு தொடங்குவதற்கும் ஒரு இ-மெயில் முகவரி, பயனரின் பெயர் மற்றும் கடவுச் சொல் ஆகியவையே போதுமானதாகும்.இதில் கணக்கு தொடங்கி பயனர்கள் படங்கள், வீடியோக்கள், மெசேஜ் போன்ற பதிவுகளை மேற்கொள்ளலாம். இதுவும் ட்விட்டர் போன்ற அமைப்பையே பெற்றிருக்கிறது. இதன் சொற்களின் அளவு 500 கேரக்டர்களாகும். இதில் ட்விட்டரை விட அதிகமான வசதிகள் கிடைப்பதாக தெரிகிறது.இருப்பினும் மாபெரும் பயனர் எண்ணிக்கையை கொண்டிருக்கும் ட்விட்டருக்கு, Mastodon எந்த வகையில் சவாலை ஏற்படுத்தும் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டியிருக்கிறது.



# அமெரிக்க பணக்காரர்கள் பட்டியலை வெளியிட்டது ஃபோர்ப்ஸ்

*2019-ஆம் ஆண்டின் அமெரிக்க பணக்காரர்கள் பட்டியலை ஃபோர்ப்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ளது. அதில் அமேசான் நிறுவனத்தின் சியிஓ ஜெப்பெசோஸ் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக முதல் இடம்பிடித்துள்ளார். அவரது சொத்தின் மதிப்பானது சுமார் 7 லட்சத்து 98 ஆயிரம் கோடியாகும். தன் மனைவி மெக்கன்சியை விவாகரத்து செய்ததையடுத்து அவருக்கு 2 லட்சத்து 52 ஆயிரம் கோடி மதிப்புள்ள சொத்துக்களை ஜெப்பெசோஸ் வழங்கிய நிலையில் மீண்டும் முதல் இடம் பிடித்துள்ளார்.*



*மைக்ரோசாப்ட் நிறுவனர் பில்கேட்ஸ் சென்ற வருடத்தை போலவே இந்த வருடமும் இரண்டாவது இடத்தை பிடித்துள்ளார். அவரின் சொத்து மதிப்பு 7 லட்சத்து 42 ஆயிரம் கோடியாகும். அவரை தொடர்ந்து மூன்றாவது இடத்தை வாரன் பஃபெட் பிடித்துள்ளார் அவரின் சொத்து மதிப்பு 5 லட்சத்து 67 ஆயிரம் கோடியாகும்.*

*மேலும் ஜெப்பெசோஸ் தன் மனைவி மெக்கன்சிக்கு விவாகரத்தின் மூலம் 2 லட்சத்து 52 ஆயிரம் கோடி மதிப்புள்ள சொத்துக்களை வழங்கியதால் மெக்கன்சியும் இப்பட்டியலில் இடம் பிடித்துள்ளார். அவர் இப்பட்டியலில் 15-ஆவது இடத்தை பிடித்துள்ளார். அமெரிக்க அதிபர் டொனல்ட் ட்ரம்ப் இந்த வருடம் பதினைந்து இடங்கள் சரிந்து 21 ஆயிரம் கோடி சொத்து மதிப்புடன் 275-ஆவது இடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.*


# தமிழினி பரிசளிப்பு விழா

இலண்டன் தமிழினி பத்திரிகை நிறுவனம் நடாத்திய பரிசளிப்பு விழா 2019 யாழ்ப்பாணம் பொதுநூலக கேட்போர் கூடத்தில் 20.10.2019 ஞாயிற்றுக்கிழமை தமிழினி பத்திரிகை நிறுவுனர் பிரதம ஆசிரியர் திரு வ.மா. குலேந்திரன் அவர்களின் ஏற்பாட்டில் இணையாசிரியர் திரு பிரியராம் சிவம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர் திரு இம்மானுவேல் ஆர்னோல்ட் கலந்து கொண்டு சிறப்பித்தார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் சின்மயாமிசன் சுவாமிஜி சிதாகாசானந்தா மற்றும் தேசிய கல்வியியற் கல்லூரி ஓய்வு நிலை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு முருமேசு கௌரிநாதன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். அதிதிகள் வரவேற்பைத் தொடர்ந்து பிரதம அதிதி மற்றும் சிறப்பு அதிதிகள் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர். நிகழ்வில் வரவேற்புரை மற்றும் தலைமையுரைத் தொடர்ந்து பிரதம அதிதி மற்றும் சிறப்பு அதிதிகள் சிறப்பு உரை ஆற்றினர்.

அதைத் தொடர்ந்து தமிழினி பத்திரிகை நிறுவனம் உலகளாவிய ரீதியில் நடாத்திய அறிவுமலை அப்துல்கலாம் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர் களுக்கு மாநகரசபை முதல்வர் திரு இம்மானுவேல் ஆர்னோல்ட் அவர்கள் தங்கள், வெள்ளி மற்றும் வெண்கலம் பதக்கங்களும், ஆறுதல் பரிசாக பெறுமதியான வெற்றிக் கேடயமும், சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார். நிகழ்வில் தமிழினி பத்திரிகை நிறுவனம் நல்லூர் கந்தசாமி ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு அகில இலங்கை ரீதியாக நடாத்திய சமய அறிவுப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பெறுமதியான பணப்பரிசில்களும் சான்றிதழ்களும் சுவாமிஜி சிதாகாசானந்தா அவர்களால் வழங்கி வைக்கப் பட்டன. அதைத் தொடர்ந்து அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பெறுமதியான பணப்பரிசில்களும் ஓய்வுநிலை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு முருகேசு கௌரிகாந்தன் அவர்கள் வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். இலண்டன் தமிழினி பத்திரிகை நிறுவுனரும் பிரதம ஆசிரியருமான திரு வ.மா. குலேந்திரன் அவர்களின் முழுமுயற்சியில் நிகழ்வுகள் இனிதே நடந்தேறின. இந்நிகழ்வை அறிவியலாளர் திரு நவரட்ணராஜா அவர்கள் தொகுத்து வழங்கினார். நன்றியுரைடன் விழா இனிதே நிறைவேறியது.

தமிழினி பத்திரிகை நிறுவனம் 1994ஆம் ஆண்டு இலண்டனில் திரு வ.மா. குலேந்திரன் அவர்களால் முதன்முதலில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அன்று முதல் பல்வேறு போட்டிகளை நடாத்தி பல பெறுமதியான பரிசில்களை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

# தமிழினி பரிசளிப்பு விழா படங்கள்








பரிசளிப்பு விழா


விழா

# பிரிட்டன் தேர்தல் மெஜாரிட்டி பெற்றார் போரிஸ் ஜான்சன்

## மீண்டும் பிரதமர் ஆகும் வலதுசாரி தலைவர்!

பிரிட்டனில் நடந்த நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் அந்நாட்டு பிரதமர் போரிஸ் ஜான்சன் பெரும்பான்மை இடங்களை வென்றுள்ளார். இதனால் அவர் மீண்டும் அந்நாட்டு பிரதமராக பதவி ஏற்க உள்ளார்.

உலகம் முழுக்க தற்போது வலதுசாரி தலைவர்களின் வளர்ச்சி வேகம் எடுத்து வருகிறது. இந்தியாவில் பிரதமர் மோடி, இலங்கையில் கோத்தபய ராஜபக்சே தொடங்கி உலகம் முழுக்க வலதுசாரி தலைவர்கள்தான் ஆட்சியில் இருக்கிறார்கள்.

இந்த நிலையில் பிரிட்டனிலும் தற்போது வலதுசாரி கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சியை சேர்ந்த போரிஸ் ஜான்சன் பிரதமராக இருக் கிறார். கடந்த சில வாரங்களுக்கு முன் போரிஸ் ஜான்சன் அங்கு பெரும் பான்மை இழந்த காரணத்தால் தேர்தல் நடத்த அழைப்பு விடுத்தார்.

### என்ன காரணம்

கடந்த மே மாதம் பிரிட்டன் பிரதமர் பதவியில் இருந்து தெரசா மே விலகினார். ஐரோப்ப யூனியனில் இருந்து பிரிட்டன் விலக வேண்டும் என்று அங்கு கோரிக்கைகள் வைக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில்



இம்மசோதாவை தெரசா மே தாக்கல் செய்தார். ஆனால் அவரின் மசோதாவிற்கு சொந்தகட்சி எம்பிக்களே ஆதரவு அளிக்க வில்லை. இதனால் இந்த மசோதா தோல்வியில் முடிந்தது.

## விலகினார்

இந்த தோல்விக்கு பொறுப்பேற்று தெரசா மே தனது பிரதமர் பதவியில் இருந்து ராஜினாமா செய்தார். இதனால் அப்போதைய வெளியுறவுத்துறை அமைச்சர் போரிஸ் ஜான்சன் பிரதமர் ஆனார். ஆனால் இவராலும் பிரக்சிட் மசோதாவை தாக்கல் செய்து அதை நிறை வேற்ற முடியவில்லை. இதனால் தனது ஆதரவு எம்பிக்களை அவைக்கு கொண்டு வரும் வகையில் மொத்தமாக பொதுத் தேர்தலுக்கு போரிஸ் ஜான்சன் அழைப்பு விடுத்தார்.



## என்ன அழைப்பு

இந்த நிலையில் பிரிட்டனில் நடந்த பொதுத்தேர்தலில் பிரதமர் போரிஸ் ஜான்சனின் கன்சர்வேட்டிவ் கட்சி முன்னிலை வகிக்கிறது. அங்கு மொத்தம் 650 இடங்கள் உள்ளது. இதில் 326 இடங்களில் வென்றால் பெரும்பான்மை கிடைக்கும். இதில் பிரதமர் போரிஸ் ஜான்சனின் கன்சர்வேட்டிவ் கட்சி **364** இடங்களில் ஏற்கனவே வென்றுவிட்டது.

## இன்னொரு பக்கம் என்ன

இதனால் அந்தக் கட்சி 47 இடங்களில் புதிதாக வென்றுள்ளது. இன்னொரு பக்கம் அந்நாட்டின் பிரதான எதிர்க்கட்சிக்கான ஜெர்மி கார்பினின் லேபர் கட்சி பல இடங்களில் தோல்வியை தழுவி இருந்த

எம்பிக்களை இழந்துள்ளது. அந்த கட்சி 203 இடங்களில் வென்றுள்ளது. சென்ற தேர்தலில் வென்ற 53 இடங்களை அந்த கட்சி இழந்துள்ளது.

## மீண்டும் வருகிறார்

இதனால் மீண்டும் போரிஸ் ஜான்சன் பிரதமர் ஆனார். இவர் பெரும்பாலும் அங்கு மீண்டும் பிரக்சிட் மசோதாவை தாக்கல் செய்ய வாய்ப்புள்ளது. பிரக்சிட் மசோதாவின் முதற்கட்ட வெற்றி இது என்று ஏற்கனவே போரிஸ் ஜான்சன் கூறியுள்ளார்.

## யார் இவர்

போரிஸ் ஜான்சன் இயல்பாகவே வலதுசாரி கொள்கை கொண்டவர். இவரின் கன்சர்வேட்டிவ் கட்சியில் இருக்கும் மற்ற முக்கிய தலைவர்களை விட இவர் அதிகமாக வலதுசாரி கொள்கை கொண்டவர். இவருக்கும் டிரம்பிற்கும் அத்தனை நெருக்கம். அவரும் வலதுசாரி கொள்கை கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல்தான் இந்திய பிரதமர் மோடியும் வலதுசாரி கொள்கை கொண்டவர் ஆவார்.

## ஆட்கடத்தலைத் தடுப்பதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திட தீர்மானம்!

அவுஸ்திரேலியா மற்றும் இலங்கைக்கு இடையில் சட்டவிரோதமாக முன்னெடுக்கப்படும் ஆட்கடத்தலைத் தடுப்பதற்கான ஒப்பந்தமொன்றை கைச்சாத்திடுவதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ச மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்கு இடையில் நேற்று (12) இடம் பெற்ற கலந்துரையாடலின்போது சட்டவிரோத ஆட்கடத்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்போது சட்டவிரோதமாக முன்னெடுக்கப்படும் ஆட்கடத்தல் காரணமாக அவுஸ்திரேலியாவும் இலங்கையும் பாரிய நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனை கட்டுப்படுத்தும் நோக்கில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# வாழ்த்துகின்றோம்



**16 செப்டம்பர் 2019ல் நடைபெற்ற ஸ்ரீலங்கா ஜனாதிபதி** தேர்தலில் வெற்றி பெற்ற ஸ்ரீலங்காவின் **8வது** ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அதிமேதகு **கோத்தபாயா ராஜபக்ச** மற்றும் மாண்புமிகு பிரதமர் **மஹிந்த ராஜபக்ச** இருவரையும் வாழ்த்தி வரவேற்கின்றோம்.

**வ.மா. குலேந்திரன்**
ஆசிரியர்
தமிழினி

## ரமேஷ் அறிவித்தல்

ஸ்ரீலங்கா ரூபவாஹினி கூட்டுத்தாபன உதவிப் பணிப்பாளர் Dr. Stanislaus Moses எமது சர்வதேச ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொள்ள விருப்பம் தெரிவித்துள்ளார்.

# இலங்கை தமிழர்களுக்கும் இந்திய குடியுரிமை!

நாடாளுமன்றத்தில் மக்களவையிலும், மாநிலங்களவையிலும் நிறைவேற்றப்பட்ட குடியுரிமை சட்டதிருத்த மசோதா எதிர்க்கட்சி களிடையே பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

1947-ல் இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் பிரிந்து சென்ற பிறகு பாகிஸ்தான், வங்காளதேசம், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஏராளமான இந்துக்கள், சீக்கியர்கள், பார்சிகள், பவுத்தர்கள், ஜெயின்கள், கிறிஸ்தவர்கள் போன்றோர் மத ரீதியிலான வேறுபாடுகள் காரணமாக துன்புறுத்தப்பட்டு இந்தியாவுக்கு தஞ்சம்தேடி அகதிகளாக வந்தனர். எந்த ஆவணமும் இல்லாமல் இந்தியாவில் பல ஆண்டுகளாக வசித்துவரும் அவர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்க வேண்டும் என்பது தேர்தலுக்கு முன்பே பா.ஜ.க.வின் நிலைப்பாடு. இந்த மசோதாவின்படி, இந்த நாடுகளில் இருந்து உரிய ஆவணங்கள் இல்லாமல், இந்தியாவில் குடியிருந்து வரும் இந்த மக்கள் 6 ஆண்டுகள் வசித்து இருந்தாலே, இந்திய குடியுரிமை வழங்கலாம் என்பதே முக்கிய நோக்கமாகும். கடந்த 2014-ம் ஆண்டு டிசம்பர் 31-ந் தேதிக்கு முன்பு குடிபெயர்ந்து வந்த மேற்கண்ட மதங்களை சேர்ந்த மக்களுக்கு குடியுரிமை வழங்கலாம் என்று இந்த மசோதாவில் கூறப்பட்டுள்ளது.

பாகிஸ்தான், வங்காளதேசம், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து வந்த முஸ்லிம்கள் இந்த குடியுரிமை மசோதாவின் கீழ் பயன்பெறமுடியாது என்பதுதான் எதிர்க்கட்சிகள் இந்த மசோதாவை எதிர்ப்பதற்கு முக்கிய காரணமாக இருக்கிறது. இதில் வடகிழக்கு மாநிலங்களான அசாம், மேகாலயா, மணிப்பூர், மிசோரம், அருணாசலபிரதேசம், சிக்கிம், திரிபுரா, நாகலாந்து ஆகிய மாநிலங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அந்த மாநிலங்களில் இப்போது பெரிய போராட்டம் நடந்து வருகிறது. மக்களவையிலும், மாநிலங்களவையிலும் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது. இது அரசியல் சட்டத்துக்கு எதிரானது, சுப்ரீம் கோர்ட்டு அரசியல் சாசன பெஞ்சில் இது நிற்காது என்பதால், சுப்ரீம் கோர்ட்டின் கதவை தட்டப்போகிறோம் என்று எதிர்க்கட்சிகள் கூறிவந்த நிலையில், நேற்று இந்த சட்டத்தை எதிர்த்து

சுப்ரீம் கோர்ட்டில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி வழக்கு தொடர்ந்துள்ளது. ஜனாதிபதி ஒப்புதல் அளித்தவுடன் காங்கிரஸ் கட்சியும் வழக்கு தொடரப்போவதாக அறிவித்துள்ளது. இந்த மசோதாவின் மீது பேசிய தமிழக எம்.பி.க்கள் உள்பட பலர், இலங்கையில் இருந்து அகதிகளாக வந்திருக்கும் இலங்கை தமிழர்களுக்கும், மியான்மரில் இருந்து வந்துள்ள ரோஹிங்கியா முஸ்லிம்களுக்கும் குடியுரிமை பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று சுட்டிக்காட்டி இருப்பது பெரிய குற்றச்சாட்டாக இருக்கிறது.

இலங்கை தமிழர்களை பொறுத்தமட்டில், 1983-ம் ஆண்டு முதல் 3 லட்சத்து 4 ஆயிரம் பேர் இந்தியாவுக்கு தஞ்சம் கேட்டு வந்தனர். அவர்களில் 2 லட்சத்து 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இலங்கைக்கு திரும்பி சென்றுவிட்டார்கள். தமிழ்நாட்டில் இலங்கை அகதிகள் 107 முகாம்களில் இருக்கின்றனர். இதில் தற்போது 59,595 பேர் வாழ்கிறார்கள். இவர்களைத்தவிர, 34,638 பேர் முகாம்களைவிட்டு வெளியே குடும்பங்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். 2009-ம் ஆண்டு விடுதலைப்புலிகளுடனான இறுதிப்போரின் முடிவுக்கு பிறகு 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அகதிகள் தமிழ்நாட்டில் இருந்து இலங்கைக்கே மீண்டும் போய்விட்டனர். மீதம் உள்ளோரில் வெகுசிலரை தவிர, மற்றவர்களெல்லாம் தமிழ்நாட்டிலேயே தொடர்ந்து வாழ விரும்புகிறார்கள். நாங்கள் 3 தலைமுறைகளாக தமிழ்நாட்டில்தான் வாழ்கிறோம். இங்கேயே படித்து, இங்கேயே திருமணம் முடிந்து வேலைபார்க்கிறோம். எங்கள் பேரக்குழந்தைகள்கூட இங்குதான் படிக்கிறார்கள். எனவே, உணர்வில் தமிழ்நாட்டை சேர்ந்தவர்களாகவே வாழும் அவர்களுக்கு இந்திய குடியுரிமை வேண்டும் என்பதே அவர்களது கோரிக்கையாக இருக்கிறது. இந்திய குடியுரிமை இல்லாததால் பல இடையூறுகள் அவர்களுக்கு இருக்கிறது. இந்த சூழ்நிலையில், பாகிஸ்தான், வங்காளதேசம், ஆப்கானிஸ்தானில் இருந்து அகதிகளாக இந்தியாவுக்கு வந்தவர்களுக்கு மட்டும் இந்திய குடியுரிமை வழங்கும் இந்த சட்டத்தில், இலங்கை தமிழர்களையும் சேர்த்து இருக்கவேண்டும். அவர்களை சேர்க்காமல் இருப்பது இந்த சட்டத்தில் ஒரு குறையாகவே கருதப்படுகிறது

**லண்டனில் கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்ட 13 வயது சிறுமி இவ் ஆண்டின் 135வது கொலையுண்ட சிறுமி.**

# சக்திவாய்ந்த 100 பெண்கள் பட்டியலில் நிர்மலா

நியூயார்க் : போர்ப்ஸ் வெளியிட்டுள்ள உலகின் சக்திவாய்ந்த 100 பெண்களின் பட்டியலில் இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் முதல் முறையாக இடம்பிடித்துள்ளார்.

உலகின் சக்திவாய்ந்த 100 பெண்களின் பட்டியலை போர்ப்ஸ் நிறுவனம் ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது. அந்த வகையில் 2019 ம் ஆண்டில் அரசு தலைமை பொறுப்பு, தொழில்துறை, மீடியா உள்ளிட்ட துறைகளில் தலைசிறந்து விளங்கும் 100 சக்தி வாய்ந்த பெண்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த பட்டியலில் ஜெர்மன் அதிபர் ஏஞ்சலா மெர்கல் முதலிடத்தில் உள்ளார். இவரைத் தொடர்ந்து ஐரோப்பிய மத்திய வங்கியின் தலைவர் கிறிஸ்டைன் லகர்டி 2வது இடத்திலும், அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் தலைவர் நான்சி பெலோசி 3வது இடத்திலும் உள்ளனர். இந்த பட்டியலில் வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா 29 வது இடத்தில் உள்ளார்.

இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் முதல் முறையாக பட்டியலில் இடம்பிடித்துள்ளார். இந்த பட்டியலில் 34 வது இடத்தில் உள்ள நிர்மலா, இந்தியாவின் முதல் முழுநேர பெண் நிதியமைச்சர் மற்றும் பாதுகாப்புத்துறை அமைச்சர் என்ற பெருமையை பெற்றவர். இதே போன்று எச்.சி.எல் கார்ப்பரேஷன் சிஇஓ நடார் மல்கோத்ரா (54), இந்தியாவின் பணக்கார பெண்மணியாக கருதப்படும் மசூம்தர் ஷா (65) ஆகியோரும் இந்த பட்டியலில் உள்ளனர்.

பில்கேட்சின் மனைவி மெலிண்டா கேட்ஸ் (6), ஐபிஎம் சிஇஓ ஜின்னி ரோமட்டி (9), பேஸ்புக் சிஓஓ ஷெரில் சண்ட்பர்க் (18), நியூசி., பிரதமர் ஜசிந்தா ஆர்டன்(38), அமெரிக்க அதிபர் டிரம்பின் மகள் இவங்கா டிரம்ப்(42), செரினா வில்லியம்ஸ் (81), பருவநிலை மாற்ற ஆர்வலர் கிரிட்டா துன்பர்க் (100) ஆகியோரும் இப்படியலில் இடம்பெற்றுள்ளனர். இந்த பட்டியலில் தொடர்ந்து 9 ஆண்டுகளாக ஜெர்மன் அதிபர் ஏஞ்சலா மெர்கல் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# 50 ஆண்டுகால போராட்டம்; 98 சதவிகிதம் ஆதரவு! புதிய நாடாக உதயம் ஆகிறது போகன்வில் தீவு!!

உலக நாடுகள் பட்டியலில் புதிதாக இணையவுள்ளது போகன்வில். ஆஸ்திரேலியாவின் வடக்கில், பப்புவா நியூ கினி நாட்டின் தீவுகளுள் ஒன்று போகன்வில். ஐக்கிய நாடுகள் சபை நடத்திய பொது வாக்கெடுப்பில், சுதந்திர ஆட்சிக்காக, அந்த தீவின் குடிமக்கள் 98 சதவிகிதம் பேர் ஆதரவாக வாக்குச் செலுத்தியுள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் வடக்கில் அமைந்திருக்கிறது பப்புவா நியூ கினி தீவு. இதன் ஒரு பகுதியாக உள்ளது போகன்வில் தீவு. பப்புவா நியூ கினி, போகன்வில் ஆகிய பிரதேசங்கள் காலனிய ஆதிக்கத்தின் கீழ் இருந்தன. ஆஸ்திரேலியாவிடமிருந்து பப்புவா நியூ கினி 1975-ம் ஆண்டு சுதந்திரம் பெற்றது. அப்போது போகன்வில் தீவும் பப்புவா நியூ கினியிடம் அளிக்கப்பட்டது. போகன்வில் பெரும்பாலும் பழங்குடி மக்கள் வாழும் தீவு. மக்களின் எதிர்ப்பையும் மீறி பப்புவா நியூ கினியுடன் இணைந்தது போகன்வில் தீவு. 5 ஆண்டுகளில், போகன்வில் தீவுக்கு விடுதலை அளிப்பதாக உறுதியளித்தது பப்புவா நியூ கினி. இன்றுவரை அது நடக்கவே இல்லை.

போகன்வில் தீவில் தங்கம், தாமிரம் ஆகியவை அதிகளவில் கிடைப்பதால் சுரங்கங்கள் கட்ட முடிவு செய்தது பப்புவா நியூ கினி. போகன்வில் தீவில் உலகின் மிகப்பெரிய திறந்தவெளி சுரங்கம் அமைக்கப்பட்டது. இந்தச் சுரங்கம் `பங்குனா' என்று அழைக்கப்படுகிறது. இதன் பங்குகளில் 20 சதவிகிதம் பப்புவா நியூ கினி அரசிடம் உள்ளது. பங்குனா சுரங்கத்திலிருந்து மட்டும், பப்புவா நியூ கினியின் பொருளாதார வளர்ச்சி 45 சதவிகிதம் லாபம் கிடைத்தது. ஆஸ்திரேலியாவின் ரியோ டின்டோ என்ற நிறுவனம் பங்குனாவை நிர்வகித்தது.

பங்குனாவில் பணியாற்றுவதற்காக பப்புவா நியூ கினி தீவுகளில் இருந்தும் ஆஸ்திரேலியாவில் இருந்தும் தொழிலாளர்கள் வரவழைக்கப் பட்டனர். அவர்களது மொழி, பண்பாடு முதலானவற்றால் போகன்வில் வாழ் பழங்குடி மக்கள் தங்கள் தனித்த பண்பாடு அழிவதாக அச்சமுற்றனர். மேலும், போகன்வில் தீவில் ஏற்பட்ட சூழலியல் 'மாற்றங்களும் பழங்குடி மக்களின் எதிர்ப்புக்கு வலுசேர்த்தது. ஆறுகள் வறண்டு போயின; மீன்கள் குறைந்தன. அரிய வகை வௌவால் இனம் அழிந்தது.

1988-ம் ஆண்டு முதல் போகன்வில் தீவில் வன்முறை வெடிக்கத் தொடங்கியது. போகன்வில் காப்பர் நிறுவனத்தில் பணியாற்றிய, பழங்குடி மக்களுள் ஒருவரான பிரான்சிஸ் ஒனா, தன் உறவினரும் போகன்வில் தீவின் சமூக செயற்பாட்டாளருமான பெபெச்சுவா செரெரோவுடன் இணைந்து சுரங்கங்களுக்கு நிலம் அளித்தவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். சூழலியல் பாதிப்புகளுக்காக போகன்வில் காப்பர் நிறுவனம் நஷ்டஈடு அளிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

காப்பர் நிறுவனம் சூழலியல் பரிசோதனை மேற்கொள்ள நியூசிலாந்து நிறுவனம் ஒன்றை வரவழைத்தது. அது வெளியிட்ட அறிக்கையில், போகன்வில் தீவின் ஜபா நதி மாசு அடையவில்லை எனக் கூற, பிரான்சிஸ் ஒனா சட்டபூர்வமான வழிகளில் நம்பிக்கை இழந்தார். ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கிய அவர், தனது அமைப்புக்கு 'போகன்வில் புரட்சிகர ராணுவம்' எனப் பெயரிட்டார். சுரங்கத்தைத் தாக்குவது, அதன் மின்சாரத்தை முழுமையாகத் துண்டிப்பது, ஆயுதங்கள் திருடுவது என பிரான்சிஸ் ஒனாவின் அமைப்பு செயல்பட, ஆஸ்திரேலியாவும் பப்புவா நியூ கினியும் 1990-ம் ஆண்டு சுரங்கத்தைவிட்டு காலிசெய்து, போகன்வில் தீவுகளைவிட்டு வெளியேறின.

பப்புவா நியூ கினி அரசும் காப்பர் நிறுவனமும் ஆற்றுப்படுகை, சுரங்கத்தின் நடவடிக்கைகளால் மாசு அடையவில்லை எனவும் வெளவால் இனம் அழிவதற்கு சுரங்கம் காரணம் இல்லை எனவும் போகன்வில் புரட்சிகர ராணுவத்திடம் பேச்சுவார்த்தை நடத்தின. நஷ்டஈடாக மிகப்பெரிய தொகை ஒன்றை அளிக்கவும் முன்வந்தன. எனினும் அவற்றை நிராகரித்த பிரான்சிஸ் ஒனா, தனி நாடு என்ற கோரிக்கையை முன்வைத்தார்.



பப்புவா நியூ கினி போகன்வில் தீவு மீது பொருளாதாரத் தடை விதித்தது. மேலும், இது உள்நாட்டுப் போராகவும் மாறியது. ஒரு பக்கம் பப்புவா ராணுவத்தை எதிர்கொண்ட போகன்வில் ராணுவம், மறுபக்கம் தங்களுக்குள் இருந்த வேறுபாடுகள் காரணமாக மோதிக்கொண்டது. போகன்வில் ராணுவத்தில் ஒரு இனக்குழு ஆதிக்கம் செலுத்துவதாக மற்ற குழுக்கள் கருதின. இந்த மோதலில் பல கிராமங்கள் எரிக்கப்பட்டன; பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

வெறும் 2 லட்சம் பேரை மக்கள் தொகையாகக் கொண்ட போகன்வில் தீவில் நடந்த 10 ஆண்டுகால உள்நாட்டுப் போரில் 20,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 1997-ம் ஆண்டு, ஆஸ்திரேலியா அரசும், நியூசிலாந்து அரசும் போகன்வில் தீவில் அமைதி நிலவுவதற்காக வேண்டுகோள் விடுத்ததோடு, அதற்காக இருதரப்பிலும் பேச்சுவார்த்தையைத் தொடங்கியது. 1998-ம் ஆண்டில் அமைதிக்கான ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது. போகன்வில் தீவுக்கு சுயாட்சி அதிகாரம் வழங்கப்பட்டதோடு, 2015 முதல் 2020-ம் ஆண்டுக்குள் பொது வாக்கெடுப்பு நடத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

## உள்நாட்டு போர்

எனினும், பிரான்சிஸ் ஒனா அமைதி ஒப்பந்தம், பேச்சுவார்த்தை எதிலும் கலந்துகொள்ளவில்லை. பங்குனா சுரங்கப்பகுதியும், சில கிராமங்களும் அவரது கட்டுப்பாட்டில் இருந்தன. 2004-ம் ஆண்டு, தன்னைத்தானே அரசர் என அறிவித்துக்கொண்ட பிரான்சிஸ் ஒனா, 2005-ம் ஆண்டு மலேரியா நோய் தாக்கி இறந்தார்.

2001-ம் ஆண்டு அறிவிக்கப்பட்ட போகன்வில் தீவு பொது வாக்கெடுப்பு, கடந்த வாரம் நடத்தப்பட்டது. போகன்வில் குடிமக்கள் ஏறத்தாழ 1.8 லட்சம் பேர் பங்கேற்ற இந்த வாக்கெடுப்பில், சுதந்திரம், சுயாட்சியை அதிகரித்தல் ஆகிய இரண்டு வாய்ப்புகள் மக்கள் முன் வைக்கப்பட்டன. இதில் 98 சதவிகிதம் பேர் போகன்வில் தனிநாடாக வேண்டும் என வாக்களித்தனர். பொது வாக்கெடுப்பு முடிவுகள் அறிவிக்கப்பட்ட போது, போகன்வில் தீவு மக்கள் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி, பாடல்கள் பாடினர்.

பொது வாக்கெடுப்பில் வெற்றிபெற்றாலும், பப்புவா நியூ கினி நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்தால் மட்டுமே முழு விடுதலை கிடைக்கும். மேலும், அந்தச் செயல்திட்டம் முழுமையாக நிறைவேற இன்னும் 10 ஆண்டுகள் ஆகலாம் என போகன்வில் தீவு மக்கள் கருதுகின்றனர். எனினும் பொது வாக்கெடுப்பில் வெற்றி பெற்றது, போகன்வில் தீவு மக்களின் பல ஆண்டுகால நம்பிக்கையை உண்மையாக்கியுள்ளது.

# அமலுக்கு வந்தது குடியுரிமை திருத்த சட்டம்; குடியரசுத் தலைவர் ஒப்புதல்!

டெல்லி: நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்ட குடியுரிமைதிருத்தச் சட்டத்துக்கு குடியுரசுத் தலைவர் ராம்நாத்கோவிந்த் நேற்று (வியாழக்கிழமை) ஒப்புதல்அளித்தார். இதையடுத்து குடியுரிமை சட்டம் அமலுக்கு வந்துள்ளது.

பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட அண்டை இஸ்லாமிய நாடுகளில் இருந்து மததுன்புறுத்தலால் இந்தியா வந்துள்ள இந்துக்கள், புத்தர்கள், பார்சிக்கள், சீக்கியர்கள், கிறிஸ்தவர்கள், ஜெயின்கள் உள்பட ஆறு சமூகத்தினருக்கு இந்திய குடியுரிமை அளிக்கும் மசோதா நாடாளுமன்றத்தின் லோக்சபாவில் கடந்த திங்கள்கிழமை நள்ளிரவு நிறைவேற்றப்பட்டது.

இதையடுத்து புதன்கிழமை நாடாளுமன்றத்தின் ராஜ்யசபாவிலும் குடியுரிமை திருத்தச் சட்டம் கடும் விவாதத்திற்கு பிறகு நிறைவேற்றப்பட்டது. இதையடுத்து குடியரசுத்தலைவரின் ஒப்புதலுக்காக வியாழக்கிழமை மத்திய அரசு அனுப்பி வைத்தது. இந்த மசோதாவுக்கு குடியுரசுத் தலைவர் ராம்நாத்கோவிந்த் வியாழக்கிழமை ஒப்புதல் அளித்தார். இதையடுத்து குடியுரிமை திருத்த சட்டம் அமலுக்கு வந்துள்ளது.

இந்த சட்டப்படி பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட அண்டை நாடுகளில் இருந்து இந்துக்கள், புத்தர்கள், பார்சிக்கள், சீக்கியர்கள், கிறிஸ்தவர்கள், ஜெயின்கள்ஆகியோர் 31 டிசம்பர் 2014ற்கு முன்பு இந்தியாவில் குடியேறி இருந்தால் அவர்கள் சட்டவிரோத குடியேறிகளாக கருதப்படமாட்டார்கள். அவர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்கப்படும். இது தொடர்பான கணக்கெடுப்பு அடுத்த வருடம் நடைபெற உள்ளது.

## கொள்முதலில் தாக்கத்தை ஏற்படுத்தும்

உச்சநீதிமன்றதீர்ப்பு குறித்து இந்திய விமானப்படை முன்னாள் தளபதி பிஎஸ் தனோவா கூறுகையில், "இந்த தீர்ப்பு வரவேற்கப்பட வேண்டிய ஒன்று, பாதுகாப்புத் துறைக்கு இது சாதகமான தீர்ப்பும் கூட. ரபேல் விவகாரத்தில் அரசு எடுத்த முடிவு சரியானது என உறுதிப்படுத்தப்பட்டு உள்ளது. ரபேல் தொடர்பான முரண்பட்ட கருத்துக்கள் இந்த தீர்ப்பின் மூலம் புதைக்கப்பட்டு விட்டது. உச்சநீதிமன்ற வழங்கிய இதே தீர்ப்பை கடந்த 2018ல் நான் தெரிவித்தேன். இந்த தீர்ப்பு ஒட்டு மொத்த ராணுவத்துக்கு தேவையான தளவாடங்களை கொள்முதல் செய்வதில் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தும்" என்றார்.

# படித்த இளையோருக்கு இம்முறை தேர்தலில் போட்டியிட அதிகவாய்ப்பு-சம்பந்தன்

"எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அதிகளவு ஆசனங்களைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கைப்பற்ற வேண்டும். படித்த இளையோருக்கு இம்முறை தேர்தலில் போட்டியிட அதிகவாய்ப்பு வழங்கவுள்ளோம்."- இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தல் ஆசனப் பங்கீடு தொடர்பில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோ மற்றும் புளொட் அமைப்பின் உயர்மட்ட உறுப்பினர்கள் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் நேற்று முன்தினம் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். இதன் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தச் சந்திப்பில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் ஆசனப்பங்கீடு தொடர்பில் பேசப்பட்டது. இம்முறை படித்த இளையோருக்கு அதிக வாய்ப்பு வழங்கவுள்ளோம் என்று இதன்போது சம்பந்தன் குறிப்பிட்டார். அத்துடன் இம்முறை அதிகளவு ஆசனங்களைக் கைப்பற்ற வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## *ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சே:*
## *பாதுகாப்பு அமைச்சு, 31 அரச நிறுவனங்கள்*

பிரதமர் மகிந்த ராஜபக்ச நிதி பொருளாதார கொள்கை அபிவிருத்தி அமைச்சு: 48 அரச நிறுவனங்கள், புத்தசன கலாச்சார சமய அலுவல்கள் அமைச்சு: 23 அரச நிறுவனங்கள்,நகர அபிவிருத்தி வீடமைப்பு மற்றும் நீர் வளங்கள் அமைச்சு: 17 அரச நிறுவனங்கள்

அமைச்சர் சமல் ராஜபக்ச:மகாவலி கமத்தொழில் நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு : 26 அரச நிறுவனங்கள்,உள்நாட்டு வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் நலனோம்புகை அமைச்சு: 11 அரச நிறுவனங்கள்.

# குடியுரிமை சட்டம்:

## பாகிஸ்தான் இந்துவுக்கு ஒரு நியாயம்? இலங்கை இந்துவுக்கு ஒரு நியாயமா? - கமல்ஹாசன் ஆவேசம்




சென்னை ஆழ்வார்பேட்டையில் செய்தியாளர்கள் சந்திப்பில் கமல்ஹாசன் கூறியதாவது:-

அதிகாரம் மக்கள் கையில் உள்ளவரைத்தான் ஜனநாயகம். இது தேசவிரோத சக்தியின் வீழ்ச்சிகளின் தொடக்கம். பாகிஸ்தான் இந்துவுக்கு ஒரு நியாயம், இலங்கை இந்துவுக்கு ஒரு நியாயமா? இலங்கை தமிழர்கள் நிலை என்ன?

கிராமங்களில் விவசாயிகளின் தற்கொலைகளைத் தடுக்காமல், மத ரீதியாக மக்களைப் பிரிக்கப்பார்க்கிறது மத்திய அரசு. போராடினால் குரலை நசுக்கும் வேலையில் ஈடுபடுகிறார்கள். பின்னோக்கி செல்லும் பொருளாதாரத்தை சரி செய்யும் நடவடிக்கையை எடுக்காமல் குடியுரிமை சட்டத் திருத்தம் ஏன்?

கேள்வி கேட்கும் குரலை நெரிப்பது அரசு பயங்கரவாதம். மாணவர்கள் மீதான அடி என்பது ஜனநாயகத்தின் மீதான அடி.

ஜனநாயகத்தை நாம் காத்திட வேண்டும். இதற்கு மாறாக உள்ள மக்களுக்கு எதிரான தனிநாயகத்தை ஒழிக்கும் வரை நான் ஓய மாட்டேன்.

தற்போது தேசவிரோத சக்திகளின் வீழ்ச்சியின் துவக்கம் இது. சர்வாதிகாரத்திற்கு எதிராக சுதந்திர காற்றை சுவாசிக்க ஜனநாயக ஆற்றில் மூழ்கிதான் எழ வேண்டும் என்றார்.

மேலும் குடியுரிமை சட்ட திருத்த மசோதாவுக்கு அதிமுக ஆதரவு அளித்துள்ளதே என்ற கேள்விக்கு பதில் அளித்த அவர், அதிமுக ஆதரவு அளித்தது தமிழ் இனத்திற்கும், தேசத்திற்கும் செய்த துரோகம். இவ்வாறு அவர் கூறினார்.

**பிரித்தானியா மகாராணியாரின் கணவர் இளவரசர் பிலிப் 20 டிசம்பர் முதல் லண்டன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.**

# பாக். முன்னாள் அதிபர் முஷாரஃப்-க்கு தூக்கு தண்டனை விதிப்பு

பாகிஸ்தான் முன்னாள் அதிபர் முஷாரஃப் (76) மீதான தேசத் துரோக வழக்கில் தூக்கு தண்டனை விதித்து சிறப்பு நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்தது.

முஷாரஃப் பாகிஸ்தான் அதிபராகப் பொறுப்பு வகித்தபோது, அந்த நாட்டில் கடந்த 2007-ஆம் ஆண்டு அவசர நிலையைக் கொண்டு வந்தார். அதன் ஒரு பகுதியாக, நாட்டின் அரசமைப்புச் சட்டத்தை அவர் முடக்கினர்.

இதன் மூலம் அவர் தேசத் துரோகத்தில் ஈடுபட்டதாக கடந்த 2013-ஆம் ஆண்டில் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) தலைமையிலான அப்போதைய அரசு வழக்குப் பதிவு செய்தது.

இந்த நிலையில், சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த அந்த வழக்கின் தீர்ப்பு கடந்த மாதம் 28-ஆம் தேதி வெளியிடுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்தத் தீர்ப்பை நிறுத்திவைக்க இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றமும், லாகூர் உயர்நீதிமன்றமும் உத்தர விட்டன.

இந்த நிலையில், வழக்கின் தீர்ப்பு 17-ஆம் தேதி வெளியிடப்படும் என்று சிறப்பு நீதிமன்றம் அறிவித்தது. அவ்வகையில், இந்த வழக்கில் முஷாரஃப் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு, அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

கடந்த 2008-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சி வெற்றியடைந்து, முஷாரஃபுக்கு எதிரான பதவி நீக்க நடவடிக்கையைத் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து தனது பதவியை ராஜிநாமா செய்த முஷாரஃப், நாட்டை விட்டு வெளியேறி தற்போது துபையில் வசித்து வருகிறார்.



# பிரதிநிதிகள் சபையில் டிரம்ப் மீது கண்டன தீர்மானம் நிறைவேற்றம்

வாஷிங்டன்: அமெரிக்க அதிபர் டிரம்ப் மீது, அந்நாட்டு பிரதிநிதிகள் சபையில் கொண்டு வரப்பட்ட கண்டன தீர்மானம், நிறைவேற்றப்பட்டது.

அமெரிக்க அதிபர் பதவிக்கான தேர்தல் அடுத்த ஆண்டு இறுதியில் நடக்க உள்ளது. அதில் குடியரசு கட்சி சார்பில் டொனால்டு டிரம்ப், மீண்டும் போட்டியிட திட்டமிட்டுள்ளார். ஜனநாயக கட்சி சார்பில் முன்னாள் துணை அதிபர் ஜோ பிடன் போட்டியிடுவார் என கருதப் படுகிறது.

இந்நிலையில் ஜோ பிடனின் மகனுக்கு உக்ரைன் எரிவாயு நிறுவனத்தில் உள்ள வர்த்தக தொடர்பு குறித்து விசாரணை நடத்துமாறு உக்ரைன் அரசிடம் டிரம்ப் கேட்டுக்கொண்டதாக புகார் எழுந்தது. அத்துடன் தன் மீதான புகாரை பார்லி.யில் விசாரிக்க தடை ஏற்படுத்த டிரம்ப் முயற்சித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டது. இதையடுத்து அதிபர் டிரம்ப் மீது எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி கண்டன தீர்மானம் கொண்டு வந்தது. இந்த தீர்மானத்தின் மீது பார்லி.யில் 14 மணி நேரம் விவாதம் நடந்தது.



## ஓட்டெடுப்பு

இந்நிலையில் இந்த புகார்களின் அடிப்படையில் டிரம்ப் மீதான கண்டன தீர்மானத்தின் மீது பார்லி.யில் ஓட்டெடுப்பு நடத்த நீதித்துறைக்கான பார்லி. குழு சமீபத்தில் ஒப்புதல் அளித்தது. இதையடுத்து டிரம்ப்பை பதவி நீக்குவதற்கான கண்டன தீர்மானம் முதல்கட்டமாக பிரதிநிதிகள் சபையில் தாக்கல் செய்யப்பட்டு விவாதம் நடந்தது.

இந்நிலையில் இந்திய நேரப்படி இன்று அதிகாலை பிரதிநிதிகள் சபையில் நடந்த ஓட்டெடுப்பில், 229 உறுப்பினர்கள் தீர்மானத்திற்கு ஆதரவாக ஓட்டளித்தனர். 198 உறுப்பினர்கள் மட்டும் தீர்மானத்தை எதிர்த்து ஓட்டளித்தனர். இதனையடுத்து பிரதிநிதிகள் சபையில் டிரம்ப் மீதான கண்டன தீர்மானம் நிறைவேறியது.

## காப்பாற்றப்படுவாரா டிரம்ப்?

இங்கு கண்டன தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும், 100 உறுப்பினர்களை கொண்ட செனட் சபையில் கண்டன தீர்மானம் நிறைவேறினால் மட்டுமே, டிரம்ப்பை பதவி நீக்கம் செய்ய முடியும். செனட் சபையில் டிரம்ப்பின் குடியரசு கட்சிக்கு 53 உறுப்பினர்கள் உள்ளனர். எதிர்கட்சியான ஜனநாயக கட்சிக்கு 47 உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர். குடியரசு கட்சிக்கு பெரும்பான்மை பலம் உள்ளதால் கண்டன தீர்மானம் தோற்கடிக்கப்பட்டு டிரம்ப் பதவி காப்பாற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த கண்டன தீர்மானம் மீது அமெரிக்க செனட் சபையில் அடுத்த மாதம் ஓட்டெடுப்பு நடத்தப்பட உள்ளது.

## தப்பிய தலைகள்:

அமெரிக்காவில் இரு அதிபர்கள் மீது இதுவரை கண்டன தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது. 1868ல் அதிபர் ஆண்ட்ரூ ஜான்சன் மற்றும் 1998ல் அதிபர் பில் கிளின்டன் ஆகியோர் மீது பிரதிநிதிகள் சபையில் கண்டன தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. செனட் சபையில் நடந்த ஓட்டெடுப்பில் இவர்களுக்கு எதிரான கண்டன தீர்மானம் தோல்வி அடைந்ததை அடுத்து அவர்கள் பதவி தப்பியது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு ட்ரம்ப் மீது பதவி விலக்கும் நடவடிக்கை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதிகள் அற்ட்றா ஜோன்டா, பில் கிளின்டன் ஆகியோர் இத்தகைய நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டபோது இவர்கள் எவரும் பதவி விலக்கப்படவில்லை இது ஒரு சதி என்று Reprblican குறிப்பிட்டுள்ளார்.



Articles are welcome for the
International Tamil Media Conference
Please send it in Tamil & English
Thamilini
90 High Street, London SW19 3BT, UK

# INTERNATIONAL TAMIL MEDIA CONFERENCE 2020

- The conference will take place in London in 21/03/2020.
- All members involved in Tamil Media activity are invited to take part.
- Please contact us to obtain a brochure about the conference.




Contact:
Founder and Organiser

**Mr. V.Kulendran**

90 High Street, London SW19 2BT
Fax 00442085428666

Sri Lanka:

**Priyaram Sivam**

Pokalai Lane, Uduppiddy, Sri Lanka
Tel: 0094779196033

India:


**Mr. Ramesh Subramanian**

15/8, Swamy Aachari Street,
Royapettah, Chennai - 600 014.
Tel: 0091-9884197789
Email: rameshva1480@gmail.com








தமிழினி தகவல் களஞ்சியம், மார்கழி மாத இதழ் 21.12.2019 திருமதி சரோஜினிதேவி குலேந்திரன் அவர்களால் அச்சடிக்கப்பட்டு இலவசமாக லண்டனில் விநியோகிக்கப்படுகின்றது. ஆசிரியர் திரு வ.மா. குலேந்திரன், இணை ஆசிரியர் திரு பிரியராம் சிவம்.